# விடுதலைப்புலிகள்

குரல் : 51 | ஆவணி - புரட்டாதி 1994 | அன்பளிப்பு: ரூபா 5/-


# சந்திரிகாவின் ஆட்சியில் சமாதானம் ஏற்படுமா?

**புதிய அரசு பதவிக்கு வந்தபின் மக்கள் மத்தியில் சமாதான முயற்சிகள் பற்றிய கதைகளாகவே உள்ளன.**

**தலைவர் பிரபாகரன் அவர்கள் மிகத் தெளிவாகவே சமாதானம் பற்றிய சாதகமான நிலைப்பாட்டைஎடுத்துச் சொல்லிவிட்டார். சந்திரிகா குமாரணதுங்காவின் பக்கத்திலிருந்தும் பெரும்பாலும், சாதகமான சமிக்ஞைகளே இதுவரை கிடைத்துள்ளன.**

ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடியும்வரை சந்திரிகா அரசால் சமாதானப் பயணத்தில் அதிக தூரம் செல்ல முடியாது என்று, அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

அதேவேளை, நிறைவேற்று அதிகாரங்களுடன் எதிர்க்கட்சியின் கையிலிருக்கும் ஜனாதிபதிப் பதவியைவிட, சிங்கள இராணுவமே சமாதான முயற்சிகள் கைகூடுவதற்குத் தடையாக இருக்கும் என்றொரு கருத்தும் நிலவுகின்றது. இக்கருத்துக்கு வலுவூட்டுவதுபோலவே படையினர் தரப்பிலிருந்துவரும் செய்திகளும் காணப்படுகின்றன.

அண்மையில் பிரதிப் பாதுகாப்பமைச்சர் அனுருத்த ரதவத்த வட - கிழக்கு படைமுகாம்களுக்கு விஜயம் செய்தபோது, படையினர்தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்ட கருத்துக்களைப் பார்க்கும்போது, மேற்குறித்த சந்தேகம் எழுவதைத் தடுக்க முடியாதுள்ளது.

அதேவேளை, படையினர் மத்தியிலிருந்து வந்த சமாதான விரோதக் கருத்துக்கள் பலவற்றிற்கு, பிரதி அமைச்சர் சாதகமான முறையில் பதில் சொல்ல எத்தனித்திருந்தமை, தட்டிக்கழிக்கக் கூடிய ஒரு விடயமாகத் தென்படவில்லை.

ஆயினும் சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய வகையில் உள்ள இராணுவத்தின் நிலைப்பாட்டை நிராகரித்து, சமாதானப் பாதையில் முன்னேறும் அளவுக்கு, சந்திரிகா அரசுக்குத் துணிச்சலுண்டு என்றும் சில அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

இது ஒருபுறமிருக்க, சிங்கள தேசத்தின் பல்வேறு தரப்பினரும் போரை நிறுத்த விரும்புகின்றனர் என்பது, அனைவரும் அறிந்த உண்மை. ஆனால், தமிழருக்கு நியாயமான உரிமைகளை வழங்க சிங்கள தேசம் தயாராக இருக்கின்றது என்று, இதற்கு அர்த்தம் கற்பிக்கவும் முடியாது.

தடைசெய்யப்பட்ட பொருட்கள் மீதான தடையை நீக்குவதையும், மின்சாரம் மற்றும் வீதிப் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ள அரசு முடிவெடுத்துள்ளதையும் மௌனமாக ஏற்றுக் கொண்டிருக்கும் சிங்களப் பேரினவாதம், தமிழருக்கு நியாயமான அரசியல் உரிமைகளை வழங்க சந்திரிகா அரசு முனையும்போதும் மௌனமாக இருந்து அதையும் ஏற்றுக்கொள்ளும் என்று, எவரும் உறுதிகூற முடியாது.

ஆயினும் சந்திரிகாவின் அரசாங்கத்தைப் பொறுத்தளவில், சமாதானப் பேச்சுக்குக் குறுக்கே போட முனையும் அனைத்துத் தடைகளையும் அகற்றி, நாட்டில அமைதியைப் பேண உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவே விரும்பும் என்றும், சில கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

ஆகவே, சமாதானம் ஏற்பட்டு மக்களுக்கு ஒரு நிம்மதியான வாழ்வு கிட்டுமா? அல்லது வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறுமா என்பதை, இப்போது உறுதியாகச் சொல்ல முடியாது!

## உள்ளே


* சந்திரிகா அரசு; புதிய நம்பிக்கை - நிலைப்பாடு
* தமிழீழம்; தியாகிகளின் நாடு - மொழியாக்கம்
* கதவுகள் திறக்கும். காவலரண்கள் கைகுலுக்கும். பேசலாம் வருக. - கவியுரை
* சிறீலங்காவின் வான் படை - ஆய்வும் தகவலும்
* ஜொனி மிதிவெடிகள் - வரலாறு
* இலட்சிய உறுதியில் இரும்பு மனிதர்கள் - பலாலியின் காவியம்
* தமிழீழ நீதிமன்றம் - ஓராண்டு நிறைவில்
* எதிரியின் வீட்டுக்குள் அதிரடி - மன்னார் சாதனை




புலிப்படை வீரர்கள் புயலாகிச் சென்றார் - தாங்கள்
களத்தினை வெல்வது திடமான தென்றார்
கரும்புலிக் குழந்தைகள் கனலாகிப் போக - எங்கள்
காவியத் தலைவனின் கண்களில் சோகம்.


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers Of TAMIL EELAM
புலிகளின் குரல்

# புதிய நம்பிக்கை!

திருமதி சந்திரிகா குமாரணதுங்காவின் அரசு இனப்பிரச்சினை தொடர்பாக புதிய அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளதை, தமிழீழ மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர்,

புதிய அரசு ஆட்சிபீடமேறியதும் சிறீலங்கா அரசில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தை சர்வதேச நாடுகளும் பாராட்டியிருப்பதுடன், சந்திரிகா அம்மையாரின் சமாதான முயற்சிகளை வரவேற்றுமுள்ளன.

முன்னைய அரசால் தடைசெய்யப்பட்ட சில பொருட்கள் மீதான தடையை புதிய அரசு நீக்கியதும் அதற்குப் பதில் நடவடிக்கையாக, காவலில் வைக்கப்பட்டிருந்த 10 சிங்களப் பொலிசாரை விடுவிக்கும்படி ஆணையிட்ட தலைவர் பிரபாகரன் அவர்கள், சந்திரிகா அம்மையாரின் முயற்சிகளை பாராட்டியிருப்பதுடன், போர்நிறுத்தத்தின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களைத் தொடக்க, புதிய அரசு உகந்த சூழலை உருவாக்க வேண்டும் என்றும் சந்திரிகா அரசுக்கு நேசக்கரம் நீட்டியுள்ளார்.

இதேவேளை, பேச்சுவார்த்தைகள் மூலம் அமைதி வழியில் இனப்பிரச்சினையைத் தீர்க்க முயலும்படி, கடந்த நாலு வருடகாலமாக புலிகள் இயக்கம் கோரிக்கை விடுத்து வந்திருப்பதும், அதற்கான சூழலை உருவாக்கும் முன் முயற்சிகளில் ஒருதலைப்பட்சமாக ஈடுபட்டு வந்ததும் இங்கு நினைவுகூரத் தக்கது.

சிங்களதேசத்திலிருந்தும் – சர்வதேச சமூகத்திலிருந்தும் – யாழ்ப்பாணம் வந்து புலிகளின் தலைமையைச் சந்தித்த அனைத்து நல்லெண்ணக் குழுக்களும், புலிகளின் சமாதான விருப்பையும் – அதைச் செயற்படுத்தத் தயாரான புலிகளின் நிலைப்பாட்டையும் – உலகிற்குத் தெளிவாகவே அறிவித்திருந்ததும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

சமாதானம் தொடர்பாக வார்த்தைகளுடன் மட்டும் நின்றுவிடாமல் (முன்னைய) அரசுக்குப் பல நல்லெண்ண சமிக்ஞைகளையும் புலிகளின் தலைமை காட்டியதையும் எவரும் மறுக்கமுடியாது. இத்தகைய நல்லெண்ண முயற்சியாக பல்வேறு சந்தர்ப்பங்களில் – பல்வேறு சமாதானத் தூதர்களுடாக – பல போர்க்கைதிகளை விடுதலைசெய்து புலிகள் காட்டிய நல்லெண்ண சமிக்ஞைகளை, முன்னைய அரசு பொருட்படுத்தாது இருந்ததும் கவனத்தில் கொள்ளத்தககது.

இவ்விதம் சமாதான வழிமுறைகள் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று, கடந்த நாலு வருடகாலமாகப் புலிகள் கடைப்பிடித்துவரும் அரசியல் நிலைப்பாட்டில் என்றும் குழப்பம் இருந்ததில்லை.

இன்று, திருமதி சந்திரிகா தலைமையிலான புதிய அரசு, சமாதான வழிமுறைகள்மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முயலப்போவதாக அறிவித்து – நடவடிக்கைகளையும் எடுக்கத் தொடங்கியிருப்பது, உண்மையில் ஒரு நல்ல அறிகுறியாகவே தென்படுகின்றது.

ஆகவே, முன்னைய அரசு தமிழ்மக்கள்மீது சுமத்திய அனைத்துப் பளுக்களையும் முதலில் அகற்றிவிட்டு, சரியான இடத்திலிருந்து பேச்சுக்களைத் தொடங்கி, யதார்த்தமான வழிமுறைகளுடாக அது நகர்த்தப்படும்போது, இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வொன்று தென்பட வாய்ப்புக்கள் உண்டு.

புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரையில், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பூர்வாங்கத்திட்டத்தை இரு செயற்பாட்டுத் திட்டங்களாக வகுத்து, ஒன்றன்பின் ஒன்றாக அவற்றை நடைமுறைப்படுத்துவதே சிறந்தது என்று கருதுகின்றது.

அதாவது **அன்றாடப் பிரச்சினைகள், அடிப்படைப் பிரச்சினைகள்** என இருபகுதிகளாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை வகுத்து அவற்றிற்குத் தீர்வுகாண முனைவது, தற்போதைய யதார்த்த சூழலில் மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

கடந்த நாலுவருடப் போரின் விளைவாக தமிழ் மக்கள் அனுபவித்துவரும் அன்றாடப் பிரச்சினைகளை இனங்கண்டு அதைத் தீர்த்துவைப்பதற்கு, புதியஅரசு முதலில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஏனெனில், இந்த நான்காண்டுப் போர் தமிழ் மக்களின் அன்றாட வாழ்வில் ஏகப்பட்ட பிரச்சினைகளை ஏற்படுத்திவிட்டது. பொருளாதாரப் பிரச்சினை, போக்குவரத்துப் பிரச்சினை, அகதிப்பிரச்சினை மற்றும் அடிப்படைத்தேவைகளை அடைய முடியாமை... என்று பல பிரச்சினைகளால் மக்கள் அல்லலுறுகின்றனர்.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை ஒரு மனிதாபிமான பிரச்சினையாகப் பார்த்து, அவற்றிற்கு முதலில் பரிகாரம் காணப்படும்போது, புதியஅரசுமீது மக்கள் நம்பிக்கைகொள்வதுடன் சமாதானப் பேச்சுக்களை தொடங்குவதற்கான ஒரு நல்ல சூழலையும் அது உருவாக்கிவிடும்; அத்துடன் இருபகுதியினர்க்குமிடையில் பரஸ்பர நம்பிக்கையையும் - விட்டுக்கொடுப்புக்களையும் – ஏற்படுத்தி, ஒரு நிரந்தர சமாதானத்தை உருவாக்கவும் அது உதவும்.

அத்துடன் தமிழினத்தின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கக்கூடிய முழு அதிகாரமும் தற்போதைய அரசிடம் இல்லாதிருக்கின்ற யதார்த்தத்தையும் கருத்திற்கொண்டே, பிரச்சினையை இரு பரிமாணங்களில் அணுகி தீர்வுகாணவேண்டும் என்று கூறுகின்றோம்.

ஆகவே, முதலில் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க அரசு ஆவன செய்யவேண்டும்.

இதேவேளை தமிழினத்தின் அடிப்படைப் பிரச்சினைகளாக தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை என்பன விளங்குகின்றன. 1985ஆம் ஆண்டில் நடந்த திம்பு மாநாட்டிலிருந்து இந்த அடிப்படைக்கோரிக்கைகளையே தமிழினம் வலியுறுத்தி வருகின்றது.

இந்த அடிப்படைக் கோரிக்கைகளுக்கு ஒரு நியாயமான தீர்வுத்திட்டத்தை வைத்தால்தான், நிரந்தரத் தீர்வு ஏற்பட வாய்ப்புகள் ஏற்படும்.

இதற்கு சந்திரிகா அம்மையாரின் அரசு தயாரா என்பது, இன்றைய கேள்வி.

அப்படித்தான் அவர் துணிந்து ஒரு முடிவுக்கு வந்தாலும், அதை நடைமுறைப்படுத்த சிங்களப் பேரினவாதம் இடங்கொடுக்குமா என்பதும் ஒரு முக்கிய கேள்வியாகவே உள்ளது.

# எங்களது

காற்று வீசிக்கொண்டிருந்தது.
அது கடலின் குளிர்காற்று!
இரவின் ஆட்சி!
அலையின் சிதறலா, மழைத்தூறலா?
அவையோ தெரித்துக்கொண்டிருந்தன!

இவற்றிடையே நடுக்கடலின் தொலைவில் –
நிலவொளி போலத் தெரிகின்றதே......?

அவை ஓய்வறியாத பாய்க்கப்பல்கள்! இருள் என்ற இரவை எண்ணி அறியாதவை! துணி வென்ற உயர்வையே தெரிந்தவை!

அது 11 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி. சென்றுகொண்டிருப்பவை இராசேந்திர சோழனின் கடற்படை!

மலாயா, சுமத்ரா, ஜாவா, பாலி, போர்னியோ எனப் பரந்து நின்றதாம் 'ஸ்ரீ விஜயப் பேரரசு!' அதன் துறைமுகப் பட்டினமான கடாரத்தை இராசேந்திர சோழனின் கடற்படை வென்றெடுக்கின்றது!

பின்னர் நல்லெண்ண அடிப்படையில் அவர்களிடமே ஒப்படைக்கிறான் சோழ அரசன்!

என்ன......?

மீண்டும் உற்றுப்பார்க்கையில் வெறும் இருட்கடல் மட்டும் தெரிகிறது!

தமிழரின் வரலாற்று உயர்வு கடல் அடியின் அடியோடு போய்விட்டதா?

* * *

இப்போ இன்னும் அகன்ற ஒரு பெருங்கடல் தெரிகிறது.

ஆனால் அது எங்கள் கடல் அல்ல.

ஐந்து பத்தல்ல - ஆறேகால் இலட்சம் சதுர மைல்களைக்கொண்ட - முப்பத்து ஆறாயிரம் அடி வரையிலான ஆழமுடைய - இன்று 'அத்திலாந்திக்' என அழைக்கப்படும் பெரும் கடல் அது!

காலம் 15 ஆம் நூற்றாண்டு.

அன்று கருவிகளால் மட்டுமல்ல, கற்பனையாலும் அறிதற்கு அரிய பரந்த - விரிந்த - ஆழ் கடலாகக் கொந்தளிக்கிறது!

அதனைக் கடந்திடத் துணிகிறான் 'கொலம்பஸ்' எனும் இத்தாலியன்!

அவனது சாதனையாக விசால வளம் கொண்ட நிலம் கண்டுபிடிக்கப்படுகிறது, 1492ஆம் ஆண்டு!

அதன்பின் துணிந்த ஸ்பானிய, பிரெஞ்சு' இங்கிலாந்து மக்கள் பெருந்திரளாய்க் கடல் கடந்து அங்கு குடியேறுகின்றனர்.

அமெரிக்க நாடாக அது வளர்கிறது!

அத்துடன் நிற்கவில்லை.

வலுமிகு அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தை நிலைநாட்டுகின்றனர், 1776 யூலை 4ஆம் நாளன்று!

ஐரோப்பிய ஆதிக்கத்தை எதிர்த்தெழுந்த இடையறாப் போராட்டம் - போர்!

அவர்களுக்கு அவர்களது அமெரிக்க நாடு!

அந்தச் சுதந்திர ஏற்றத்தின் 220 ஆண்டில் - இன்றைய அமெரிக்கா!

இவ்விதம் பல நாடுகளின் எழுச்சியும் சுதந்திர ஏற்றமும் ஒலிக்க -

2000த்திற்கும் மேலான வருடங்களைக் கண்ட தமிழினத்தின் நோவும் நலிவும் முனகலும் ஏன்? ஏன்......?

முனகல் குமுறலாய் மாறும்போது? அந்த மாற்றப் பிரளயத்தில்......

* * *

21 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி!

தாய் தன் சிறுவனுக்கு உணவூட்டிக்கொண்டிருக்கிறாள்; பாலனின் கையில் ஒரு பாடநூல்!

''அம்மா, இந்தக் கதையைச் சொல்லுங்கோ.''

தாய் பாடத்தலைப்பைப் பார்க்கிறாள்!

'எங்கள் தமிழீழம்' என்றிருக்கின்றது!

''நாளைக்கு நாங்கள் சுதந்திரம் பெற்ற நாளாம். பள்ளிக்கூடத்திலும் கொண்டாடுவார்கள். அந்தக் கதையைச் சொல்லுங்கோ அம்மா'' - சின்னத் தமக்கையின் குரல் இது.

தாயின் உதடு சிரிக்கிறது; கண்ணில் தன்னை மீறிய ஒரு துளி.

அந்த அன்னையின் குரல் இசைக்கிறது -

''ஏனைய நாட்டவர்கள் பலர் பிறநாட்டைக் கண்டு எடுத்ததைக் கூறுவர். நாம் எம் சொந்த நாட்டை மீட்ட ஏற்றத்தைக் கூறுவோம்.''

'' அவர்கள் யாரம்மா?''

''கொலம்பஸ் என்பார்கள்; வஸ்கொடகாமா, பெர்டினன் மகலன் என்றெல்லாம் சொல்வார்கள். தமிழீழத்தவராகிய நாங்கள்......''

'' சில பெயர்களைச் சொல்லுங்கோ அம்மா.''

'' செல்வங்களே, சொல்லப் பல பெயர் உண்டு. அவற்றுடன், தம் பெயரையே மறைத்துச் செயற்பட்ட பெயர்கள்......''

''உங்க தம்பி என்பீர்களே? அந்தப் பெயரைச் சொல்லுங்கோ.''

தாய் மௌனத்தில் மூழ்கிறாள்.

வானத்தின் ஆத்ம குரல் கேட்கிறது -

'' அந்த ஈகச் சிகரத்தின் பெயர் -

கரும்புலி.''

- நாக. பத்மநாதன்

# எதிரியின் கோட்டைக்குள் ஒரு அதிரடி!

சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்புக்குள் இருக்கும் சிங்களக் காவல்துறை நிலையமொன்று, 11.08.1994 அன்று புலிவீரர்களால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவமானது, ஒகஸ்ட் மாதத்தில் நடந்த, ஒரு முக்கிய போராட்டச் செயற்பாடாக அமைந்துவிட்டது.

இத்தாக்குதலின் சிறப்புக்கு நான்கு பிரதான அம்சங்கள் காரணிகளாக அமைந்துவிட்டன.

ஒன்று: எதிரியின் கோட்டைக்குள் நிகழ்ந்த தாக்குதல் என்பது.

இரண்டு: பட்டப்பகலில் நடந்த (மாலை 5 மணி) துணிகர இராணுவ நடவடிக்கையாக இருந்தமை.

மூன்று: தாக்குதல் நடைபெற்றவிதம் - அதாவது, இராணுவ உடை தரித்த புலிவீரர்கள் பிரயாணிகள் பேருந்து வண்டியில் சென்று, சிங்களக் காவல் நிலையத்திற்கு முன்னால் இறங்கி, 'கொமாண்டோ' பாணியில் தாக்குதல் நிகழ்த்தியமை.

நான்கு: தாக்குதலை வெற்றிகரமாக நடாத்தியதுடன், கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகளுடனும் வீரச்சாவடைந்த புலிவீரர்களது வித்துடல்களுடனும், வெற்றிகரமாகப் பின்வாங்கிய இராணுவச் செயற்பாடு.

இந்த இராணுவ சாதனையில், மேஜர் ஜஸ்மினின் பங்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

மன்னார்த்தீவுப் பொறுப்பாளராகக் கடமையாற்றிய மேஜர் ஜஸ்மின் இந்த 'கொமாண்டோ' தாக்குதலுக்கான திட்டத்தைத் தீட்டியிருந்ததுடன், தாக்குதலைத் தலைமையேற்று நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிங்களப் படைத்துறைத் தலைமையை அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்திற்கும் உள்ளாக்கிய இந்தக் 'கொமாண்டோ' தாக்குதல், ஒரு பதிலடித் தாக்குதல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிலாவத்துறையில் அமைந்திருந்த எமது கடற்புலிகளின் முகாம் ஒன்றிற்குச் சமீபமாக உலங்குவானூர்திகள்மூலம் வந்திறங்கிய சிங்களப் படையின் 'கொமாண்டோ' அணியொன்று, கடற்புலிகளின் முகாமைத் தாக்கியதில், மூன்று போராளிகள் வீரச்சாவடைந்திருந்தனர்.


12.7.94அன்று நடந்த இந்தத் தாக்குதல் சம்பவத்திற்குப் பதிலடியாகவே, 'பி. எம். சி. கட்டடத்தில் அமைந்திருந்த சிங்களக் காவல் நிலையம் புலிவீரர்களால் தாக்கியழிக்கப்பட்டது. இந்தத் தாக்குதலில் ஒன்பது சிங்களக்காவல்துறையினர் கொல்லப்பட்டதுடன், பத்திற்கு மேற்பட்டவர்கள் படுகாயங்களுடன் ஓடித்தப்பிவிட்டனர். அத்துடன் 22 நவீன துப்பாக்கிகளையும் புலிகள் கைப்பற்றியிருந்தனர்; போராளிகளின் தரப்பில் 5 புலிவீரர்கள் வீரச்சாவைத் தழுவியிருந்தனர்.

அந்த 'கொமாண்டோ' தாக்குதலின் கதை இதுதான்:


1) தாக்குதலுக்கான அனைத்துப் பயிற்சிகளையும் எடுத்து - ஒத்திகையையும் பார்த்துவிட்ட ஜஸ்மின் தலைமையிலான 'கொமாண்டோ' அணி, படகுகள்மூலம் மன்னார்த்தீவினுள் புகுந்தனர்.



2) தலைமன்னாரிலிருந்து மன்னார் பேருந்து நிலையத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பிரயாணிகள் பேருந்தை, இராணுவ உடையுடன் நின்ற புலிவீரன் ஒருவன் வழிமறித்தான். பேருந்து நின்றதும் சிங்கள இராணுவத்தினர்போல் நடித்த புலிவீரர்கள் பயணிகளைக் கீழிறக்கிவிட்டு, மன்னார் நோக்கிப் பயணத்தைத் தொடங்கினர்.



3) சிங்களக் காவல் நிலையம் அமைந்திருந்த 'பி. எம். சி.' கட்டடத் தொகுதிக்கு முன்னால் பேருந்தை நிறுத்தியபோது, அதே இடத்தில் சிங்களக் காவல்துறையினரின் சோதனை நடவடிக்கையை முடித்துக்கொண்ட இன்னொரு பேருந்தை விரைவாகப் பின்னால் செல்லும்படி, இராணுவச் சீருடையிலிருந்த புலிவீரர்கள் பணித்தனர்.






4) அப்பேருந்து பின்நோக்கிச் சென்றபின் திடீரென 'பி.எம்.சி.' கட்டட காவல் நிலையம்மீது புலிவீரர்கள் தாக்குதலைத் தொடுத்தனர். கை ஏவுகணை மற்றும் துப்பாக்கிகள் சகிதம் தாக்குதல் நடாத்தப்பட்டது.



5-6) 10 நிமிடத்திற்குள் காவல் நிலையக் கட்டடத்தை புலிவீரர்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தபோது, 9 காவல்துறையினர் இறந்திருந்தனர்; மிகுதிப்பேர் காயங்களுடன் தப்பியோடிவிட்டனர். புலிகள் தரப்பில் நான்கு போராளிகள் வீரச்




சாவடைந்திருந்தனர். வீரச்சாவடைந்த போராளிகளது வித்துடல்களுடன் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையும் ஏற்றிக்கொண்டு அதே பேருந்து, முன்னர் அது வழிமறிக்கப்பட்ட அதே இடத்திற்குப் போய்ச்சேர்ந்தது.

7-8) அங்கிருந்து கால்நடையாக புலிகள் அணி கடற்கரையை நோக்கிப் பின்வாங்கத் தொடங்கியது. உசாரடைந்த இராணுவம் பல முனைகளூடாக நகர்ந்துவந்து, புலிகளின் அணியுடன்



சண்டையிடத் தொடங்கியது. இருண்ட பிறகும் சண்டை தொடர்ந்தது. சண்டையிட்டபடியே கடல்மூலம் பின்வாங்கப் புலிவீரர்கள் முயன்றனர். இத்தகைய சண்டையொன்றில், தாக்குதலுக்குத் தலைமையேற்றுச் சென்ற மேஜர் ஜஸ்மினும் வீரச் சாவடைந்தார்.



9) இறுதியில் வெற்றிகரமாக, படகுகள்மூலம் தாக்குதலணி பின்வாங்கிச் சென்றது.





லெப். ராஜா
அந்தோனி கிறிஸ்ரி
மட்டக்களப்பு - 1976



லெப். அறிவனார்
கணேஸ் பாலச்சந்திரன்
யாழ். - 14. 01. 1974



கப்டன் குமரன்
பரமேஸ்வரன் பிரதீபன்
யாழ். - 26. 01. 1974



கப்டன் சிறிக்காந்த்
பொன்னுச்சாமி குகதீஸ்வரன்
மட்டக்களப்பு - 09. 03. 1973



மேஜர் ஜஸ்மின்
மரியதாஸ் அன்ரன்பியூட்டில்ஸ்
மன்னார் - 23. 02. 1968

# கப்டன் ஈழமாறன்

''டேய் மச்சான் என்னைக் கொண்டுபோய் விடுறா...... என்ர பொடியள் என்ன மாதிரியோ...... விடடா மச்சான்......''

வைத்தியசாலையின் கட்டிலில் இருந்தபடி, காலில்குத்திய திருக்கை முள்ளைப் பற்றிப் பெரிதும் கவலைப்படாதவனாய், வேதனைகளை மறைத்தபடி, தன் அருகில் இருந்த போராளியிடம் கூறிக்கொண்டிருந்தான் ஈழமாறன். அவனின் நச்சரிப்பினைத் தாங்காது வைத்தியரிடம் சொல்லும் அவர்களுக்கு, அவரின் வார்த்தைகள் ஏமாற்றத்தையே கொடுக்கும்.

''விசம் உடனே இறங்காது தம்பி, இதால ஆக்கள் செத்துப்போய் இருக்கினம்; ஒரு இரண்டு நாள் பெ றும், பிறகு போகலாம்'' எனப் புன்னகைதனை முகத்தில் தவழ விட்டவாறு சொல்வதை, ஏமாற்றத்துடன் பார்ப்பான் அவன். அதனையும் மீறி பொதுமகன் ஒருவனின் சைக்கிளில் ஏறி, பயிற்சி நடக்கும் இடம் வந்துவிட்டான். பொறுப்பாளரின் கண்டிப்பான பார்வைதனைக் கண்டு, முகத்தைத் தொங்கவிட்டவாறு மீண்டும் வைத்தியசாலைக்குச் செல்லநேர்ந்துவிட்டது.

கால் நோ மாறும் முன்னரே மூன்று நாட்களின் பின்னர் மீண்டும் பயிற்சிப் பாசறை வந்து, தனது பிள்ளைகளுடன் பயிற்சிகளை மேற்கொண்டான். இவ்வாறு மனஇயல்பினைக் கொண்டவன் இவன். ஆம்......

இப்பயிற்சியானது சிங்களப்பேய்களின் பற்களைப் பிடுங்குவதற்காய்...... ஆணவத்தைச் சிதைப்பதற்காய்...... தமிழ் மக்களின் உடல்கள் கடலுடன் கலப்பதை நிறுத்துவதற்காய்...... சுமுகமான ஒரு பாதைதனைத் திறப்பதற்காய்......

பூநகரிக் கூட்டுப்படைத்தளம் மீதான தாக்குதல்களை மேற்கொள்வதற்காய், ஆண் - பெண் போராளிகள் அனைவருமே கடல், தரையெனப் பாராது கடும் பயிற்சிதனை மேற்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவனாக, குழுவின் தலைவனாக ஈழமாறனும்......

மகிழ்வுடன் கடல் கரைதனைத் தழுவி மீளும் - ஆழத்துடன் அழகும் கொண்ட - கடற்கரைதனை அணையாகப் பெற்ற மாதகல்தனைத் தனது தாயாகக் கொண்டவன். கடலன்னையின் அணைப்பிலே திளைத்தவன். சுப்பிரமணியம் நாகேஸ்வரி தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக 05.05 1973 இல் இம்மண்ணில் உதித்தான். ஏழு இரத்த உறவுகளையும் இவன் தனதாக்கிக் கொண்டான்; தாயக தாகத்தைத் தனது உயிராக்வும் கொண்டான். எப்பொழுதுமே மெல்லிய புன்னகைதனை முகத்தில் படரவிட்டிருப்பான். துடிதுடிப்புடன் வளைய வருவான். பார்வையினாலே எல்லோர் மனத்தையும் கவர்ந்துவிடுவான். ''வெளிநாடு வா'' என மூத்த உடன்பிறப்பு அழைத்தும் கூட, இவன் தனது உறுதியைத் தளரவிடவில்லை. ''அண்ணா, நீ தாய்க்காக உழைத்துவிடு; நான் தாய்நாட்டுக்காக உழைக்கப்போகிறேன்'' எனக் கூறித் தனது பணியைத் தொடர்ந்தான்.

ஆரம்பக் கல்விதனை மாதகல் 'சென். ஜோசப் பாடசாலை'யில் பயின்ற பின்னர், 1984 ஆம் ஆண்டு, தெல்லிப்பழை 'மகாஜனாக் கல்லூரி'யில் தனது கல்வியைத் தொடர்ந்தான். படிப்பில் மட்டுமல்லாது, விளையாட்டுத் துறையிலும் திறமையாகச் செயற்பட்டு, கோட்ட- மாவட்டரீதியில் பல பரிசில்களைப் பெற்றுத் தனது பாடசாலைக்குப் பெருமைதேடிக் கொடுத்தவன்.

இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பால் மனமுடைந்த இவன், தனது சேவை இந்நாட்டுக்கு உடனடித் தேவையெனப் புரிந்து, 1990 இல் தன்னை முழுமையாக இயக்கத்தில் இணைத்துக்கொண்டான்; பயிற்சிக் காலத்தின்போது திறமையாகச் செயற்பட்டு, அனைவரினதும் பாராட்டுக்களையும் பெற்றான். பயிற்சி தவிர்ந்த ஏனைய நேரங்களில், சக போராளிகளை அருகில் இருத்தி, விடுதலைப் போராட்டங்கள் பற்றி விளங்க வைப்பான். பொறுப்பாளரின் வருகையை அறிந்தவுடனேயே தனது குட்டிப் பிரசங்கத்தை நிறுத்திவிடுவான். ஆகையினால், மறைந்திருந்து இவனது பேச்சைக் கேட்டு ரசிப்பார்கள்.

பயிற்சி முடிந்தவேளை வரலாற்று முக்கியத்துவம் பெற்ற 'யாழ். கோட்டைச் சண்டை'யில் ஈடுபடும் வாய்ப்புக் கிட்டியது. திறமையாகச் செயற்பட்டதன் காரணமாக ஏழு பேருக்குப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்ட உடனேயே காரைநகர் சண்டைக்களம் அவனை அழைத்தது. அதன் பின்னர், மன்னார் பரப்புக்கடந்தான் நோக்கி முன்னேறிய இராணுவத்தை எதிர்கொள்ளவென இவனது அணிக்கு அழைப்பு வந்தது. கடும் சண்டை ஆரம்பமானது. புலிகளின் தாக்குதலுக்குத் தாக்குப்பிடிக்க முடியாத இராணுவம் பின்வாங்கியது.

மீண்டும் சண்டை மூள, ஒரு தோழனை இழக்க நேரிட்டது. மனம் கொதித்த தினேஷ் கடுமையான தாக்குதல் தொடுத்தவாறு முன்னேறினான்...... எதிரியின் தாக்குதலால் காலிலும் கையிலும் காயமடைந்த இவனைத் தக்க முறையில் வைத்தியப் பிரிவுக்கு அனுப்பினார்கள் போராளிகள்.



கப்டன் ஈழமாறன்
(தினேஷ்)
(சுப்பிரமணியம் இந்திரகுமார்)
வரணி வீதி, கொடிகாமம் (மாதகல்)
பிறப்பு : 05-05-1973
வீரச்சாவு : 11-11-1993

காயம் மாறி முகாம் வந்த வேளை, அவனுக்கு எல். எம். ஜி. கனரக ஆயுதம் வழங்கப்பட்டது. அதை எந்த நேரமும் பளிச் என்று வைத்திருப்பான் தனது வெள்ளைப் பற்களைப்போல......

இவனுடன் பழகிய நாட்களை அசைபோட்டுப் பார்க்கிறேன். அவை மறக்க முடியாதவை; மனதில் இருந்து அகற்ற முடியாமல் ஆழத்தில் கிடந்து என்னுடன் மீட்டல் வகுப்புக்கள் நடாத்தும். அன்றொருநாள், பலாலியைச் சுற்றியுள்ள காவலரண்களில் ஒரு பகுதியில் எமது அணி நிற்கும் வேளை. குறிப்பிட்ட நேரமில்லாமல், தூங்கி விழித்தவுடனேயே எதிரி தாக்குதலை ஆரம்பித்து முடிப்பான். அவ்வேளையில் கன்னத்தை உராய்ந்தபடி, காதைச் 'செவிடுபட வைக்கும்' அதிர்வோடு, அருகினில் ஷெல் வெடிக்கும். நாம் அனைவரும் பாதுகாப்பினை எடுத்து நிற்கும்போது, தினேஷ் மட்டும் தலையை நிமிர்த்தி நிற்பான்.



## போராளியின் குருதிச்சுவடுகள்

''தலை போகப்போகுது பதியடா தலையை'' எனக் கூறினால், ''டேய் தலையை எல்லோரும் உள்ளுக்கை வைத்திருந்தால் அவன் வந்து, கொட்டி எழும்பு என்று தலையில் பிடித்துத் தூக்குவான்'' என்பான். இக்கட்டான நேரங்களிலும்கூட நகைச்சுவை உணர்வுடன் உரையாடுவான்; இது அவனது சுபாவம். பலாலி என்றாலே பழவகைத் தோட்டம் கண்முன்னாலே தெரியும்...... இன்றைக்கு எல்லாவற்றையுமே எதிரிசிதைத்து நிற்கிறான்...... எமக்குப் பசியெடுக்கும் நேரம் எல்லாம் பதுங்கி முன்னே சென்று, பழங்கள் பறித்து வந்து உண்பது வழக்கம். கூடவே தினேஷ் வருவான். ஒருநாள் நாம் முன்செல்ல ஆயத்தமான வேளை தினேசைக் காணவில்லை. ''பரவாயில்லை; நாம் போய்வருவோம்'' எனக்கூறி எமது அணி முன்னேறியது - பழம் பிடுங்குவதற்காய்.

மரத்தில் ஏறியாகிவிட்டது. பழங்களைப் பறித்துக் காற்சட்டைப் பையினுள் போட்டுக்கொண்டிருந்த வேளை......சிங்கள உச்சரிப்புக் கேட்டது. மிக அருகிலே எதிரி இருப்பதினாலும், அவன் அடிக்கடி வந்து செல்லும் இடமானதாலும் நாம் மெதுவாக - சத்தம் செய்யாது மரத்திலிருந்து இறங்கிப் பதுங்கி நின்றோம்......வரவரச் சிங்கள உச்சரிப்பு மிக அருகிலேயே கேட்க ஆரம்பித்தது...... இந்த வேளையில் சண்டை பிடிப்பது எமக்கு இழப்பைக் கூடுதலாகத் தரும் என்பதை மனதிற்கொண்டு, மிக வேகமாகப் பின்வாங்கினோம். எமது காவலரணில் நிலை எடுத்து நின்றுகொண்டு தாக்குதலுக்குத் தயாரானோம். தினேசும், லெப்டினன் சிந்துவும் சிரித்தபடி எமது செருப்புக்களை எடுத்துக் கொண்டு...... சிங்களம் கதைத்து எம்மை வெட்கப்படவைத்துவிட்டான். நிலைமையை ஒரு நொடியில் உணர்ந்துகொள்ள, அசடு வழிந்தபடி அவனுடன் சேர்ந்து சிரித்தோம். இப்படி அவனது குறும்புத்தனங்களைக் கூறிக்கொண்டே போகலாம்.

ஆறுமாதப் பிணைப்பால் ஒன்றுபட்டு எமது பணி தொடர்ந்த வேளையில், வேறிடம் வரும்படி அழைப்பு வந்தது...... எமது சோகங்களைப் பகிர்ந்துகொண்டு அவனுக்கு விடை கொடுத்தோம். கரும்புள்ளியாக அவன் மறையும் வரை கைகளை அசைத்து விடை கொடுத்தோம். எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து, இலட்சியம் என்னும் பிணைப்பால் ஒன்றுபட்ட எங்களது பாசங்களை வார்த்தைகளால் வரைந்துவிட முடியாது.

பிரிந்து சென்ற அவன் 'மின்னல்' தாக்குதலில் ஏ கே. எல். எம். ஜி. கனரக ஆயுதத்திற்கு உதவி இயக்குநராகச் சென்றான். மிகவும் பலம்வாய்ந்த ஒன்றாகச் சண்டை நடைபெற்றது. எதிரி தனது முப்படைகளினதும் உதவியுடன் மிக மூர்க்கத்தனமாகத் தாக்கினான்...... ஆனால் எம்மிடமோ அசைத்துக் குலைக்கமுடியாத உறுதி பக்கபலமாக இருந்தது.

இங்கும் அவனது தலை வீரத்தின் வடு ஒன்றினை ஏற்றுக்கொள்கின்றது......அவனது உடலில் காணப்படும் ஒவ்வொரு தழும்பும் ஒவ்வொரு சண்டைதனைப் பறைசாற்றி நிற்கும்...... அவனது குருதியை எத்தனை முறை இம்மண் மாதா ஏந்தியிருப்பாள்......நினைத்துப் பார்க்கிறேன்......காயம் ஆறிய பின்னர் இவனுக்கு மருத்துவ வீடு கடமை செய் எனக் கூறியது...... அன்பாகவும், பண்பாகவும், அதே வேளை வேதனையுடன் முனகும் போராளிகளுக்குத் தாய்க்குத் தாயாகவும் நின்று அரவணைப்பினையும் வழங்கியவன். சில காலங்களின் பின்னர் மீண்டும் அவனுடன் சேரும் காலம் கிட்டியது.

பாசறைதனில் பயிற்சி வழங்கப்பட்டது...... மகிழ்வுடன் பொழுதுகளைக் கழித்தோம். உடலலுப்பின் காரணமாக கடமை நேரத்தில் சிறிது கண்ணயர்ந்துவிட்டான் தினேஷ்; இவனுடன் யசி என்ற போராளியும்தான்......! ''நித்திரை எமக்கு எதிரி. அதனால ஏறுங்கோ தென்னை மரத்தில'' - பொறுப்பாளரின் கண்டிப்பான குரல். இருவரும் மரத்தில் ஏறிவிட்டனர். ஆனால் அங்கும் அவனது குறும்புகள் நின்றுவிடவில்லை. சிரித்தபடியே மரத்திலிருந்து இளநீர் குடித்தான். கீழே நின்றவர்களுக்கும் போட்டான். அவனது இச்செயல்களால் அவனிடம் கோபம் பறந்து போக, இறக்கப்பட்டு பயிற்சிக்கு அனுப்பப்பட்டான்.

இவ்வாறு தான் செய்யும் சிறிய தவறுகளுக்காயினும் பெறும் தண்டனைகளை மகிழ்வுடன் ஏற்றுச் செய்யும் நிலை, அவனுக்கே உரியதுதான். எமதுகொட்டில் கலகலப்பாக இருக்கிறதென்றால் அங்கு தினேஷ் இருப்பது எல்லோருக்கும் தெரிந்துவிடும்.

நாம் அனைவரும் அவனைச் செல்லமாக ''சம்மாட்டி'' என்றுதான் அழைப்போம். அதற்கு அவன் ஒரு நாளும் கோபித்தது கிடையாது. மெல்லிய புன்சிரிப்புடன் சென்றுவிடுவான். அராலித்துறையருகே இவனது அணி நின்றபோது, பிறந்த மண் எதிரியால் சூழப்படுகின்றது. கொதித்தெழுந்த அவன்... தனது கடைசித்தங்கை மேகலாவை எண்ணி மிகவும் துயரமுற்றான். வீட்டில் தாயிடத்தும், கடைசித் தங்கையிடமும்தான் இவனது பாசப்பிணைப்பு இறுகியிருந்தது. ''என்ர கடைசித் தங்கச்சிக்கு ஒண்டு நடந்தா என்ர உயிரையே

த. பாரதி

விட்டிடுவனடா; அவள்தாண்டா என்ர உயிர்'' எனத் தங்கைமீதுள்ள பாசத்தின் ஆழத்தைத் தனது சக நண்பனிடம் கூறிவைப்பான். அடுத்து மக்களின் போக்குவரத்திற்காகப் பயன்பட்ட கொம்படிப் பாதைதனை மூடிவிடும் நோக்கில் - மக்களின் உணர்வைச் சிதைக்கும் நோக்கிலும் - எதிரியானவன் 'பலவேகய -2' எனப் பெயர் சூட்டப்பட்ட தாக்குதல் ஒன்றை மேற்கொண்டான். அங்கும் முளைத்தான் தினேஷ். இரண்டாம் நாட் சமரில் அவன் அடித்த தோட்டாக்களின் எண்ணிக்கை ஐந்துதான். ''ஏன்ரா மச்சான் அடிக்கயில்லை?'' எனக் கேட்ட நண்பனிடம், ''இயக்கம் படுற கஷ்டத்தில கண்ட மாதிரி அடிக்கக்கூடாது...... ஒவ்வொரு தோட்டாவும் வாங்க இயக்கம் எவ்வளவு கஸ்ரப்படுது தெரியுமா?'' என, தனது சொற்பொழிவைத் தொடங்கிவிட்டான்.

ஆம்...... எதிரியானவன் சம்பளத்திற்காக வருபவன். அரசாங்கம் கடன்பட்டு வாங்கும் ஆயுதத்தை அவன் கண்டபடி அடிப்பான்; கிலிகொண்டு அடிப்பான் ஏனென்றால் அவனுக்குத் தன்னுயிர் முக்கியம். விடுதலைப் புலிகள் அப்படியல்ல. சண்டை நேரத்தில்கூட நிதானமாகச் செயற்பட்டு, எவ்வளவு மீதப்படுத்த முடியுமோ அவ்வளவு மீதப்படுத்தி, எவ்வளவு அவனிடமிருந்து எடுக்கமுடியுமோ அவ்வளவையும் எடுத்துக்கொண்டுதான் வருவார்கள். ''இலட்சியம் ஒன்றுதான் எங்களின் உயிர்...... அதற்காக எம் உயிர் போவதுகூட எமக்கு கவலையைத்தராது......''

சண்டை முடிந்தது. சோகங்களை மனதில் தாங்கியவாறு, சக தோழர்களின் சில உடல்களைத் தோளிலும் சுமந்தவாறு மீளுகின்றோம்.

பழையபடி முகாம் களைகட்டுகின்றது. ''இனிப்பு செய்வோமடா''

( 5 ஆம் பக்கம் பார்க்க )

# தமிழீழ நீதிமன்றம்



## ஓராண்டு சேவையுடன் மக்களின் இதயத்தை வென்றுவிட்டது!

தமிழீழ நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு – அதன்மூலம் தமிழீழ சட்டம் உத்தியோகபூர்வமாக அமுல்படுத்தப்பட்டு, இந்த மாதத்துடன் (ஆவணி), ஓராண்டு முடிவடைந்துள்ளது.

தனியரசுக்கான ஒரு அலகு – மக்களின் நலனை அடிப்படையாகக்கொண்ட நீதிநெறிகளை நிலைநாட்டி மேற்பார்வை செய்யவேண்டிய ஒரு அமைப்பு – மக்களால் நன்கு வரவேற்கப்பட்டுள்ளதுடன், அவர்களது மனதிலும் இடம்பிடித்துக்கொண்டுவிட்டது.

இக்குறுகிய காலத்தில் தமிழீழ நீதிமன்றுகளின் செயற்பாடுகளில் கிடைத்த வெற்றி, உண்மையில், புலிகள் இயக்கத் தலைமையின் ஆட்சித்திறனுக்கு ஒரு உதாரணமாகும்.

1993 ஓகஸ்ட் 21 ஆம் திகதி சுன்னாகத்தில் முதல் நீதிமன்றம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இன்று, அதன் ஓராண்டு முடிவில், யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில் ஆறு நீதிமன்றங்கள் செயற்படத் தொடங்கிவிட்டன.

மாவட்ட நீதிமன்றங்கள் செயற்படத் தொடங்கிய பின் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒன்றின் தேவையும் எழுந்தது.

யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றுடன், ஜனநாயக முறையிலான நீதிநிருவாக அமைப்பு மேலும் ஒருபடி முன்னேறியுள்ளது. இந்த மேன்முறையீட்டு நீதிமன்று மூன்று நீதியாளர்களைக்கொண்ட உயர் அமைப்பாகச் செயற்படுகின்றது; மாவட்ட நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை உறுதிப்படுத்தக்கூடிய அல்லது மாற்றியமைக்கக்கூடிய அதிகாரம்மிக்க உயர்பீடமாக செயற்படத் தொடங்கியுள்ளது. தற்போதைய நிலையில் வன்னி மாவட்டத்தின் மேன்முறையீட்டு நீதிமன்றமாகவும் இந்த யாழ். மேன்முறையீட்டு நீதிமன்றம் இயங்குகின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்து, சிங்கள அரசின் சிவில் நிருவாகம் தமிழர் நிலத்தில் தடுத்து நிறுத்தப்படும் வரை, சிங்கள அரசின் நீதிமன்றங்கள் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஒரு அடக்குமுறைக் கருவியாகவே – தமிழர்களைப் பொறுத்தளவில் – இருந்தது. தமிழரின் தேசிய எழுச்சியை நசுக்குவதிலும் தமிழ்த் தேசாபிமானிகளுக்கு தண்டனை வழங்குவதிலுமே சிங்கள நீதிமன்றங்கள் மும்முரமாக நின்றன. நீதியை நிலைநாட்டல் என்ற போர்வையில் தமிழினத்தின் சனநாயக உரிமைகளைப் பறிப்பதிலும் – தமிழ் மக்களுக்கெதிராக சிங்கள அரசு இழைத்துவந்த மனித உரிமை மீறல்களை நியாயப்படுத்துவதிலுமே, சிங்கள நீதிமன்றங்கள் பெருமளவு நேரத்தைச் செலவிட்டன.

ஆனாலும், புலிகள் இயக்கத்தின் இராணுவபலத்தை படிப்படியாக வளர்த்த எமது தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள், தமிழ் மக்களது நலனைப் பாதுகாப்பதற்காகவென புதிய நிர்வாக அலகுகளை உருவாக்கி, தனியரசுக்கான கட்டுமானங்களில் ஈடுபடத் தொடங்கினார். அதில் ஒன்றுதான் நீதிநிருவாகத்துறையின் உருவாக்கம் ஆகும்.

நீதிநிருவாகத்துறையினர் தமிழீழத்தின் அனைத்து மக்களினது நன்மையையே முழுதான நோக்கமாகக்கொண்டு, ஒரு சட்டவரைபை வரையத் தொடங்கினர்.

இந்த சட்டவரைபு சமூகநீதியை, ஆண் – பெண் சமத்துவத்தை அடித்தளமாகக் கொண்டமைந்துள்ளது. இதில் குறிப்பாக பெண்களது உரிமைக்கும் – பாதுகாப்புக்கும் சட்டரீதியான உத்தரவாதம் அளிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அதாவது சமூகத்தில் பெண்களது அந்தஸ்தை உயர்த்துவதிலும், அவர்களுக்கு சமவாய்ப்பும் சம உரிமையும் கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்துவதிலும் இந்த சட்டவரைபு, ஒரு வரலாற்றுப்பாத்திரத்தை வகிக்கின்றது. இச் சட்டவரைபு நூலுருப்பெற்று பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழீழ சட்டக் கல்லூரி ஒன்றையும் நிறுவும்படி பணிப்புரை வழங்கிய தலைவர் அவர்கள், போராளிகளே சட்டவாளர்களாகவும் – நீதியாளர்களாகவும் பணியாற்றும் வகையில் புதுமையைப் புகுத்தத் திட்டமிட்டார்.

நீதிமன்றங்கள் இயங்கத் தொடங்கி தமிழீழ சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்ற போராளிகள், நீதியாளர்களாக – சட்டவாளர்களாக – பணியாற்றத் தொடங்கிய போது, பலர் அதிருப்திக் கண்கொண்டே அதை நோக்கினர். ஆனால் காலம் செல்லச் செல்ல போராளிகளான நீதியாளர்களினதும் சட்டவாளர்களினதும் நேர்மையான-நடுநிலையான–சேவைகளைக்கண்டு தமது பழைய கருத்துக்களை மாற்றத் தொடங்கியதுடன், அவர்களது திறமையான பணிகளைப் பாராட்டவும் செய்தனர்.

இந்த நீதியாளர்கள் சட்டவாளர்களுள் கணிசமான தொகையினர் பெண்கள் என்பது, முற்போக்கானதும் சமத்துவத்தை நிலைநிறுத்துவதாகவும் உள்ளது என்பதும் கவனிக்கத்தக்கது.

தமிழீழ நீதிமன்றங்கள் செயற்படத் தொடங்கியதிலிருந்து மக்களின் முறைப்பாடுகள் மிக விரைவாகத் தீர்த்து வைக்கப்பட்டுவருகின்றன என்பது, மக்களே ஏற்றுக்கொண்ட விடயமாக மாறிவிட்டது.

முன்னைய காலத்தில் சிங்கள நீதிமன்றங்களில் வழக்குகள் அநாவசியமாக இழுத்தடிக்கப்படுவதுடன், வழக்காளிகள் பல வகையில் பணச்செலவுகளுக்கும் உட்படுத்தப்பட்டனர். இன்று நிலைமை அப்படியல்ல; விசாரணைகள் விரைவாக நடந்தேறுவதுடன், பண விரயங்களும் தடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஓராண்டிலும் தமிழீழ மாவட்ட நீதிமன்றங்கள் ஆறிலும் பதிவுசெய்யப்பட்ட வழக்குகளின் தொகை, மூவாயிரத்து தொள்ளாயிரத்து ஆறுபத்துமூன்று (3963) ஆகும். இதில் தீர்ப்பு வழங்கப்பட்டவை ஆயிரத்து அறுநூற்று பதின்மூன்று (1613) ஆகும். இதேவேளை மாவட்ட நீதிமன்றுகளின் தீர்ப்புகளில் அதிருப்திகொண்டு மேன்முறையீட்டு நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்பட்ட வழக்குகளின் தொகை நாற்பத்தேழு (47) ஆகும். இதில் முப்பது மேன்முறையீடுகள் தீர்த்துவைக்கப்பட்டுவிட்டன. உண்மையில் இவை வேகமான செயற்பாடுகள் என்பதில் ஐயமில்லை. இருந்தாலும் நீதிமன்றுகளின் தொகை அதிகரிக்கப்படும்போது இந்த நிலைமையில் இன்னும் வளர்ச்சி தென்படும்.

தமிழீழ காவல்துறையும் தமிழீழ நீதிநிருவாகத்துறையும், மீட்கப்பட்ட எமதுமண்ணில் சட்டம் – ஒழுங்கைப் பேண வெற்றிகரமான முறையில் நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், சமூக அமைதியை உருவாக்கி, மக்கள் மத்தியில் நீதி நிலைநிறுத்தப்படுவதற்குப் பெரும் பங்காற்றுகின்றன என்பது, வெளிப்படையான உண்மை. ○

---

## கப்டன் ஈழமாறன்...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு நண்பன் கேட்க, ''ஓம் நான் நல்லாச் செய்வன். தேவையானதைக் கொண்டுவாங்கோ'' எனக்கூறியபடி அடுப்பு வேலைக்கு ஆயத்தமானான் தினேஷ். சீனி, தேங்காய், மா எனச் சேகரிக்கப்பட்டு வேலைகள் தொடங்கின. அடுப்பருகே இருந்து, சட்டியில் பாணியைக் கிண்டிவிட்டுக்கொண்டிருந்தான் அவன். காதைச் செவிடுபடுத்தும்படியாக எங்கிருந்தோ ஒரு ஷெல் வந்து வீழ்ந்தது. போட்டதை அப்படியே போட்டுவிட்டு பாதுகாப்புத் தேடிய பின்னர் மீண்டும் வந்து பார்த்தபோது, சட்டியில் இனிப்பு கறுப்பாக இருந்தது. அனைவரும் சேர்ந்து அவனைக் கேலிபண்ண ஆரம்பித்துவிட்டார்கள்.

''டேய் எனக்கென்ன செய்யத் தெரியாதே......? கொண்டு வா, உங்களுக்கு இனிப்புத் தந்தாச் சரிதானே......?'' மீண்டும் வேலைகள் ஆரம்பமாக, சுவையான இனிப்பினை எல்லோருக்கும் வழங்கினான். சமையலிலும் தான் சளைத்தவன் அல்ல என்பதையும், எதையும் தன்னால் செய்யமுடியும் என்ற அவனின் திடத்தையும் எண்ணிப் பார்க்கிறேன். இன்றும் அவன் தனது கையால் வழங்கிய இனிப்பின் சுவை என் நாவில் தித்திக்கிறது. அவனை இழந்த வேதனை நெஞ்சின் ஓரத்தே முள்ளாய் நெருடுகின்றது.

அன்று ஒரு நாள், கடும் பயிற்சிக்குப் பின்னர் - பல மாத வேவுப் பணியின் பின்னர் - தாக்குதல் திட்டம் தீட்டப்படுகின்றது. 10 11. 93 நள்ளிரவு புலிவீரர்களின் அணி புயலெனப் பாய்கின்றது. சிதறி ஓடும் சிங்களப் படையதனின் சிரசில் வெடிபாய்கிறது. கடலில்பாயும் கோழையவன் கடற்புலிகளால் மடிகின்றான். உதவிக்கு வந்த விமானம் குண்டுகளை எங்கே தட்டுவது என்று தெரியாது, கடலில் கொட்டுகின்றது. விமான எதிர்ப்பு ஒருபுறம் முழங்க, கரும் பச்சைப் பேய்களைத் தரையிலே எதிர்க்க, நீல ஓநாய்களைக் குருதிக் கடலிலே சிதைக்க, எங்கும் புகைமயமாக இரத்தாறு நிலத்திலே ஓடிக் கடலிலே கலக்கிறது...... தமிழ் மக்களின் குருதியைக் கலந்திட வைத்த கறுப்பு நாய்களின் உடலங்கள் பல மிதந்து சென்றன, அதே உப்பாற்றின் மீது......

சடுகுடு விளையாடுவதைப் போல மிக அருகிலேயே நெருக்கமாக நின்று போரிடும் தன்மை அங்கு காணப்பட்டது. செய்வதறியாது திகைத்த எதிரி கடலில் பாய்ந்துநிற்கவும் தொடங்கினான். அங்கும் அவனுக்கு மரணப் பாடை கட்டப்பட்டது.

''அண்ணை எனக்குக் குறிப்பிட்ட இடத்தைப் - பிடிச்சுப்போட்டுத்தான் உங்களுக்குத் தொடர்பு எடுப்பன்; இது சத்தியம்'' - உறுதியாக தளபதியின் கையில் அடித்து விட்டுத் தனது அணியுடன் மின்னலென உள்ளே நுழைகின்றான்.

குறிப்பிட்ட நேரம் தாண்டியும் அவனது தொடர்பு கிடைக்காதவிடத்து சக நண்பன் தொடர்பினை எடுககின்றான். அங்கே ..... அங்கே...... கடைசியாகத் தனது உடலில் உள்ள குருதி அனைத்தையுமே தமிழ்மாதாவுக்கு அர்ப்பணமாக்கிவிட்டு, பூநகரி மண்மீது வீழ்ந்து கிடக்கிறான் வீரமறவன்...... அவனது தொலை தொடர்பு சாதனம் மட்டும் தொடர்ந்து அலறிக்கொண்டிருந்தது.

''அண்ணை எனக்குத் தந்ததைப் பிடிக்காமல் திரும்பிவரமாட்டன்''-அவனது உறுதி கலந்த குரல் காற்றினிடை ஒலிக்கின்றது.

அன்றொரு நாள் எனது டயரியில், ''என்ர நினைவாக இதைஎழுகிறன் மச்சான். நான் செத்தாலும் இதை ஞாபகமா வைச்சிரு என்ன?'' என்றபடி எழுத ஆரம்பிக்கிறான் -

''நாம் அனைவருமே பலகொடியில் பூத்த மலர்கள். காலம் இட்ட கட்டளையால் எதிர்த்துப் போராட மாலையாகச் சேர்ந்தவர்கள். பிரிவு நம்மை ஆட்கொண்டாலும் எமது தலைவனின் இலட்சியப் பாதை உறுதி தளராது.''

இப்படிக்கு,
தினேஷ்

அவனது இவ்வரிகள் என் இதயததில் இன்னும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. 'ஓமடா தினேஷ், இலட்சியப் பாதை எண்டைக்குமே உறுதி தளராது......!' ○

# "தமிழீழம்: தியாகிகளின் நாடு"

**சுவீடன் நாளிதழான 'பொலிரிக்கன்' [POLITIKEN] பத்திரிகையில் 23.04.94 அன்று 'தமிழீழம் தியாகி: களின் நாடு' என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டிருந்த கட்டுரையைக் கீழே தருகின்றோம்.**

10 வருடங்களாக இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரசுக்கும் இடையில் நடக்கும் கொடூரமான யுத்தம், 40,000 (நாற்பதினாயிரம்) இற்கு மேற்பட்ட மக்களைப் பலியாக்கி உள்ளது. இதில் பலர் பொதுமக்களே. கொழும்பில் உல்லாசப் பயணிகள் தங்கும் விடுதிகளின் மீதான குண்டுத் தாக்குதல்கள், உல்லாசப் பயணத்துறையை அச்சுறுத்தியுள்ளது.

தெல்லிப்பழையில் கிட்டத்தட்ட ஒன்றும் இல்லை. பலாலி இதற்கு வடக்கே உள்ளது. ஒரு உடைந்த வீட்டில் இருந்து புலிகளின் துப்பாக்கிச் சத்தம் கேட்டது. அதன் பிறகு 'கிறனேட்' ஒன்று அங்கிருந்து 100 மீற்றர் தொலைவில் உள்ள தோட்டம் ஒன்றில் விழுந்து சிதறுகிறது அங்கிருந்து 300 மீற்றர் தொலைவில் கண்ணிவெடி வயல்கள், மின்சாரவேலிகள்.

இங்கே இராணுவம் கிடங்குகளில் பதுங்கியுள்ளது. பலாலி-வடக்கிலே பெரிய இராணுவ முகாம். புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடபுலத்தில் உள்ளது. இது தமிழீழத்தில் ஒரு பெரிய முகாம் என்கிறார், 28 வயதுடைய செல்வராசா - யாழ்ப்பாணப்பகுதிப் புலிகள் பொறுப்பாளர். இவரே எங்களைப் பலாலி முகாமடிக்கு அழைத்து வந்தார்.

## முறிக்கமுடியாத நம்பிக்கை

பலாலியில் கிட்டத்தட்ட 5 - 10 ஆயிரம் இராணுவத்தினர் உள்ளனர். இந்த முகாம் வடக்கே ஒரு முக்கியத்துவம் வாய்ந்த முகாம் ஆகும். இங்கே இராணுவம் தனது கடற்படை மற்றும் ஆகாயப்படை முகாம்களையும் கொண்டுள்ளது. இங்கிருந்தே யாழ்ப்பாணம் மீதான தனது ஆகாயத் தாக்குதல்களை இராணுவம் நடத்தி வருகின்றது.

90,000 இராணுவத்தையும் அவர்களது பாரிய ஆயுதங்களையும் புலிகளால் தாக்குப்பிடிக்க முடியாது ஆனால் புலிகளினது 'தாய்நாட்டின் மீதான நம்பிக்கை'யும் உறுதியும், அவர்களுக்கு வெற்றியை அளிக்கின்றது.

யாழ்ப்பாணம் இலங்கையில் பெரிய ஒரு நகரமாக இருந்தது. 7 வருடமாக நடாத்திய எறிகணை மற்றும் ஆகாயத் தாக்குதல்களால் இன்று, இங்கு ஒரு வீடுகூட தாக்குதல்களில் இருந்து தப்பவில்லை.

"குண்டுகளைப் போட்டு எம்மைப் பலநூறு வருடங்களுக்கு அரசாங்கம் பின்தள்ளியுள்ளது" என்கிறார் அருட்திரு நேசநாயகர்; போனவருடம் இவருடைய சென். யேம்ஸ் தேவாலயம விமானத் தாக்குதல்களுக்குஉள்ளாக்கப்பட்டு, அதில் 13 மக்கள் கொல்லப்பட்டனர். இந்தக் கொடுமை, இவர் தனது 25 வருடகால சேவையைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் போதே நடந்தது.

இலங்கை அரசாங்கத்தின் பொருளாதாரத் தடையினால் (1990 இல் அறிமுகப்படுத்தப்பட்டது) மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவுகள் அதிகளவில் கூடியுள்ளன. 1992 இல் இராணுவம் ஆனையிறவுப் பாதையைத் தடை செய்து. யாழ். குடாநாட்டுக்கும் ஏனைய பகுதிகளுக்கும் இடையிலான தொடர்பைத் தடைசெய்துள்ளது. தடைசெய்யப்பட்ட பொருட்களில் எரிபொருட்கள், மெழுகுதிரி, பற்றரிகள், நெருப்புப் பெட்டி, வீடுகட்டத் தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் மருத்துவ தளபாடங்கள் எனபன அடங்கும். பெற்றோலுக்குப் பதிலாக அங்கு மண்ணெண்ணெய் பாவிக்கப்படுகிறது. கொழும்பில் இது ஒரு லீற்றர் 13 ரூபா; ஆனால் இங்கு 113 ரூபா; கடத்திக் கொண்டுவரப்பட்ட பெற்றோல் 800 ரூபா.

2,50,000 மக்கள் (சனத்தொகையில் காற்பங்கினர்) யாழ்ப்பாணக் குடாநாட்டில் அகதியாக உள்ளனர். தமது தாய்நாட்டிலேயே இவர்கள் அகதி. இவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களிலும் மற்றும் கரையோரப் பகுதிகளிலும் இருந்து இடம் பெயர்ந்தவர்கள்; நாளாந்தம் சிங்கள இராணுவத்தின் கடற்படைப் பீரங்கித் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுபவர்கள். இவர்கள் உடைந்த கடைகளிலும் பழைய கட்டடங்களிலுமே வாழ்கின்றனர்.

150 அகதிக் குடும்பங்கள் தமது வாழ்க்கையை யாழ். புகையிரத நிலையத்தில் தரையிலேயே நடாத்தி வருகின்றார்கள். புஷ்பம், 32 வயது - இவர் தனது கணவன் மற்றும் 4 பிள்ளைகளுடன், மூன்று வருடங்களாக இங்கு தங்கியுள்ளார். இவர் இராணுவம் ஊர்காவற்றுறையைப் பிடித்த பின்னரே அங்கிருந்து வெளியேறினவர்; "உலகம் எம்மை மறந்துவிட்டதா?" எனக் கவலையாகக் கேட்கிறார்.

## போசாக்கின்மை

அசோக்குமார் (ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதரகத்தின் யாழ்ப்பாணப் பொறுப்பாளர்) சொல்வதின்படி, அநேக மக்கள் சத்துக்குறைபாடுகளினால் வருந்துகிறார்கள். யாழ்ப்பாணத்தில் பிறக்கும் பிள்ளைகள் 25 - 30 வீதம் நிறை குறைந்தே பிறக்கிறார்கள் - கொழும்புடன் ஒப்பிடும் போது.

மற்றும் தொற்றுவியாதிகளும் பரவுவதாகவும் மலேரியா போன்ற தொற்று நோய்களால் குழந்தைகள் பலர் இறப்பதாகவும் இவர் கூறுகிறார். அதேவேளை, இவற்றைத் தடுப்பதற்கான மருந்துவகைகளையும் அரசாங்கம் தடைசெய்துள்ளதாகவும் கூறுகின்றார்.

யாழ்ப்பாண வைத்தியசாலை இயங்கிக்கொண்டிருக்கின்றது. இது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு எல்லைகளுக்குள் இருந்தும், பல தடவைகள் இராணுவத்தின் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. ஒரு மில்லியன் மக்களால் பாவிக்கப்படும் இந்த வைத்தியசாலையில் 1000 கட்டில்கள்கூட இல்லை. அநேகமான நோயாளிகள் நிலத்திலேயே வைக்கப்பட்டுள்ளனர். போக்குவரத்துப் பிரச்சினைகளால் பலர் இங்கு வர முடியாத நிலையில் உள்ளனர்.

## சாக்கடல்

இந்தக் கடல் நீரேரிமூலமே யாழ். குடாநாட்டில் உள்ள 9,00,000 மக்கள் வெளி உலகத்துடனான தொடர்பை வைத்துள்ளனர். இந்தக் கடல் நீரேரிப் பாதையை அரசாங்கம் 92 இல் தடைசெய்தது. அதில் இருந்து அரசாங்கம் இந்த நீரேரியில் காணப்படும் எல்லாவற்றையும் புலிகள் எனக் கூறித் தாக்கி வருகிறது. இந்தத் தடை இருந்தும் 1000 இற்கு மேற்பட்ட மக்கள் தமது சைக்கிள்கள் மற்றும் பல பொருட்களுடன், வள்ளத்துக்காகக் கிளாலிக் கடற்கரையில் காத்து நிற்கின்றனர். இந்தப் பாதை பெரிதும் ஆபத்தானது. 92 இல் இருந்து 100 இற்கும் மேற்பட்ட மக்கள் இந்த நீரேரியில் அரசாங்கத்தின் ஆகாயப்படை மற்றும் கடற்படையின் தாக்குதல்களுக்கு உள்ளாகி இறந்துள்ளனர். இந்த நீரேரிப் பாதையை யுத்தமில்லாத இடமாகச் செய்வதற்காக 93 இல், ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதரகம் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியது. ஆனால் அரசாங்கம், இராணுவ அழுத்தத்தின் காரணமாக மறுத்துவிட்டது; இதைப் புலிகளும் பயன்படுத்தக் கூடும் எனக் கூறியே மறுத்தது. இந்த மறுப்பின் காரணமாகவே புலிகள் இந்த நீரேரிக்குத் தெற்கே உள்ள பூநகரி கடற்படை முகாமைத் தாக்கி இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

யுத்த முடிவுக்கான எந்த அறிகுறிகளும் அங்கு இல்லை. இதற்கு மாறாக ஜனாதிபதி **விஜயதுங்கா**, பேச்சுவார்த்தைக்கு இடம் கொடுக்காமல் புலிகளை முற்றாகத் தான் அழிக்கப்போவதாகக் கூறுகிறார். இவரே **பிரேமதாசா** கொலை செய்யப்பட்டதற்குப் பிறகு, புலிகளுக்கு எதிரான யுத்தத்தை நடாத்தி வருகிறார். மற்றும் இவர், "இலங்கையில் இருப்பது இனப்பிரச்சினை அல்ல; பயங்கரவாதப் பிரச்சினை" என்கிறார்.

**"நாங்க பெரிய சிறை ஒன்றிலேயே வாழ்கின்றோம் தமிழ் இனம் அமைதியாக திருகிக் கொல்லப்படுகின்றது" என்கின்றார் அருட்திரு இம்மானுவேல்.**

**"இந்த மதகுரு போராளிகளின் கெரில்லா யுத்தத்தைத் தான் 100 வீதம் ஆதரிப்பதாகக் கூறுகின்றார். அடிமையாக இருப்பதை விட நேர்மையாகச் சாவதே நல்லது" என்கின்றார். வெள்ளைப் புலிகள் என்றே கத்தோலிக்க மதகுருமாரை கொழும்பு அரசாங்கம் அழைப்பதாகச் சொல்லுகின்றார்.**

## வெள்ளைப் புலிகள்

"நாங்கள் பெரிய சிறை ஒன்றிலேயே வாழ்கின்றோம். தமிழ் இனம் அமைதியாக திருகிக் கொல்லப்படுகின்றது" என்கின்றார் அருட்திரு. இம்மானுவேல். இவர் யாழ்ப்பாண கத்தோலிக்க குருமடத்தின் அதிபர். இவரை நான் மதகுருமார் வாழும் கட்டடம் ஒன்றில் சந்தித்தேன். இந்தக் கட்டடம்கூட இராணுவத்தின் குண்டு மழைக்கு உட்பட்ட - எண்ணமுடியாத - கட்டடங்களில் ஒன்று.

இந்த மதகுரு போராளிகளின் கெரில்லா யுத்தத்தைத் தான் 100 வீதம் ஆதரிப்பதாகக் கூறுகின்றார்.

**150 அகதிக் குடும்பங்கள் தமது வாழ்க்கையை யாழ் புகையிரத நிலையத்தில் தரையிலேயே நடாத்தி வருகின்றார்கள். புஷ்பம், 32 வயது - இவர் தனது கணவன் மற்றும் 4 பிள்ளைகளுடன், மூன்று வருடங்களாக இங்கு தங்கியுள்ளார். இவர் இராணுவம் ஊர்காவற்றுறையைப் பிடித்த பின்னரே அங்கிருந்து வெளியேறினவர்; "உலகம் எம்மை மறந்துவிட்டதா?" எனக் கவலையாகக் கேட்கிறார்.**

"அடிமையாக இருப்பதை விட நேர்மையாகச் சாவதே நல்லது" என்கின்றார் 'வெள்ளைப் புலிகள்' என்றே கத்தோலிக்க மதகுருமாரை கொழும்பு அரசாங்கம் அழைப்பதாகச் சொல்லுகின்றார். "இது மக்களுக்கு எதிரான யுத்தம். தமிழ்ச் சமுதாயம் அழிந்துவிடக்கூடிய நிலையில் உள்ளது. நான் அகிம்சை வழியையே நாடுகின்றேன் ஆனால் இளைஞர்கள் ஏன் ஆயுதத்தைத் தூக்கினார்கள் என்பது விளங்குகின்றது" எனக் கூறுகின்றார். "இந்த ஆயுதப் போராட்டத்தை நாம் பல வருட ஜனநாயகப் போராட்டத்திற்குப் பின்னரே தொடங்கினோம்" என்கின்றார்.

"அரசாங்கம் மாதந்தோறும் அனுப்பும் உணவு 40 வீதமான தேவையையே பூர்த்தி செய்கிறது. மக்கள் தொடர்ந்து உயிர்வாழ்வதற்கு வெளிநாடுகளில் இருந்து தமிழ் மக்கள் அனுப்பும் பணமே உதவியாக உள்ளது. எமது பிள்ளைகள் போசாக்கின்றியே பிறக்கின்றார்கள்; எமது வாழும் நாட்கள் குறைந்துள்ளன. வாழ்க்கைத் தரத்தைப்பற்றி சொல்லத் தேவையில்லை" என்கின்றார் அருட்திரு. இம்மானுவேல்.

## இறந்தோரின் தேவாலயம்

மாவீரரைப் புகழ்ந்து பாடும் பாட்டுக்கள் ஒலிக்கின்றன. இவர்கள் தமது உயிரைத் தமிழீழத்துக்காக அர்ப்பணித்துள்ளனர் - கோப்பாயில் மாவீரர்கள் 'துயிலும் இல்லம்' ஒன்று உள்ளது. 1300 இற்கும் அதிகமான மாவீரர் கல்லறைகள் அங்கு உள்ளன. இந்த மாவீரர் துயிலும் இல்லத்திற்கு மாலை நேரமாகிய பின் 4 பெண் போராளிகள் பார்வையிட வந்திருந்தனர்.

இதில் அநேகமானோர் பூநகரி யுத்தத்திலேயே இறந்தவர்கள் என்கிறார் 'துயிலும் இல்லப்' பாதுகாவலராக உள்ளவர். இதில் 11-13 கார்த்திகை 1993 இல் 500 பேருக்கு மேல் இறந்தவர்களாவர்; இதில்பல பெண்போராளிகளும் உள்ளனர்.

## பொலிஸ் படை

92 ஆம் ஆண்டு புலிகள் தமது காவல்துறையை அமைத்துவிட்டனர்; போனவருடம் நீதி நிருவாகத் துறையையும் நிறுவிவிட்டனர். "இராணுவம் யாழ்ப்பாணத்தைப் பிடிப்பதை முறியடிக்கவும், மற்றும் இராணுவம் புலிகளை ஒடுக்க வந்தால் அதை முறியடிப்பதற்கும் தான் அநேகமான சண்டைகள் நடக்கின்றன" என்கிறார், கலாநிதி **அன்ரன் பாலசிங்கம்**. இவர் புலிகளின் அரசியல் ஆலோசகர் மற்றும் அவர்களின் பேச்சாளராகவும் உள்ளார். இவரை நான் கோண்டாவில் முகாமில் சந்தித்தேன். "புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள இடங்கள் அனைத்தும் ஒரு தனிநாட்டுக்கான பூர்த்திகளைக் கொண்டுள்ளன. நாங்கள் உலகத்தின் பெரியதொரு இராணுவமான இந்தியஇராணுவத்தைவெளியேற்றினோம். இந்திய அமைதிப்படை 3 வருட இழப்புகளுக்குப் பிறகு, 90 ஆம் ஆண்டு வெளியேறியது. இலங்கை இராணுவத்தில் உள்ளவர்கள் தெற்குப் பகுதியைச் சேர்ந்த பையன்கள். தெற்கில் உள்ள மக்கள் தமது பிள்ளைகள் இறப்பதை வெறுக்கிறார்கள்" என்கிறார் பாலசிங்கம்.

நாம் கதைத்துக்கொண்டிருக்கும் போது, இராணுவத்தின் குண்டு போடும் விமானம் பறந்து சென்று எமது பேச்சை நிறுத்தியது.

நான் கிளிநொச்சியைத் தாண்டிச் செல்லும்போது, இராணுவத்தின் மூன்று இறந்த உடல்கள் மக்களின் பார்வைக்காக புலிகளினால் வைக்கப்பட்டுள்ளன; இவர்கள் ஆனையிறவில் கெரில்லாத் தாக்குதல் ஒன்றில் புலிகளினால் கொல்லப்பட்டவர்கள் அச்சடலங்களை மக்கள் பார்த்தவண்ணம் உள்ளனர். இவர்கள் தமிழீழயுத்தத்தில்இந்த முறை கடைசியாக பலியானவர்கள். ○

# கதவுகள் திறக்கும்

# காவலரண்கள் கைகுலுக்கும்

# பேசலாம் வருக!


வணக்கம் வருக!
தமிழீழம் வரவேற்கிறது.
மானுடத்தை நேசிக்கும் மனிதர்களுக்கு
எங்கள் எல்லைக்கதவுகள் என்றும் திறந்திருக்கும்.
காவலரண்கள் கைகுலுக்கும்.
எத்தனைதடவைகள் எடுத்துச் சொல்லிவிட்டோம்.
சிறிலங்காவே!
நீ பக்கத்து நாடேதவிர, பகைநாடல்ல.....
உன்னையே ஒருமுறை உற்றுப்பார்த்து
ஒரு கேள்வியைக் கேட்டுப்பார்.
ஒன்றாக இருந்ததை உடைத்ததுயார்?
சிங்களதேசமென்றே திசைகள் எதிரொலிக்கும்
எமது கவிஞர்களின் பழையகவிதைகளைப் படித்துப்பார்,
உடைத்தது யாரென்ற உண்மை தெரியும்.
"மாவலி கங்கை நாடெங்கள் நாடே"
"ஈழ மண்டல நாடெங்கள் நாடே"
"சிங்களமும் செந்தமிழும் சேர்ந்திலங்கும் திருநாடு"
நேற்றுவரை எமது கவிஞர்களின் நெஞ்சத்துடிப்புகள்
இப்படித்தானே துடித்தன.
தென்னிலங்கைச் சிம்மாசனங்கள்தானே
இந்தவரிகளை இல்லாதழித்தன.
உறவில் உதிரத்தைச் சொரியவைத்தன.

## உலைக்களம்

**வியாசன்**

"மாங்காய் வடிவிலான மரகதத்தீவு"
"சுற்றிவரக்கடல் சூழ்ந்த சுந்தரப்பூமி"
பழைய 'பாலபோதினி' யில்
நாங்கள் பாடிய பாடல்வரிகளின்
குரல்வளையை நெரித்துக் குதறியது யார்?
மூன்று 'பிரதமர்களைக்' கொண்ட குடும்பம்தானே
'தேசியத்துக்கு' முதலில் தீமூட்டியது.
காதைப் பிடித்திழுத்து
கடுக்கன் பூட்டிய துவாரத்தைத் தேடியபோதுதான்;
உறவுப்பாலம் முதலில் உடையத் தொடங்கியது.
இன்று; "இனப்பிரச்சினையைப் பேசித்தீர்ப்போம்"
என்றெல்லாம் பேசுகிறீர்களே!
நன்றி.
சமாதானத்தின் கதவுகளை ஒட்டமுடியதுயார்?
வெள்ளைப் புறாவுக்கு விஷ ஊசி ஏற்றியதுயார்?
யார்? யார்?
உரத்துக் கேட்டுப்பாருங்கள்.
சிவனொளிபாத மலையின் சாரலில்
உங்கள் பெயர்களே எதிரொலிக்தும்.
களனி கங்கையின் கரைகள் எங்கும்
மூங்கில் மரங்கள் உங்கள் முகத்துக்கு கைநீட்டி
நீங்களென்றே குரலெழுப்பும்.
பாணந்துறையில்
கோவில் குருக்களின் பச்சை ரத்தம் பாய்ந்தபோதே
சிங்களம் விழிகளைத் திறந்திருந்தால்.....
இந்த வில்லங்கம் வந்திருக்க மாட்டாது.
சுருட்டுக்கடைகளுக்குத் தீமூட்டியபோது
உங்களில் ஒருத்தனுக்காவது
தமிழனும் மனிதனாகத் தெரிந்திருந்தால்.....
ஆலமரத்தின் விழுதுகள் அறுந்து
ஆணிவேரே ஆடியிருக்க மாட்டாது.
இன்றுகூட என்னவாம்?
உண்மையின் உயிர்நிலை தெரியவில்லையே!

சலுகைகளைத்தானே உரிமைகள் என்று
தப்புக்கணக்குப் போடுகிறீர்கள்.
வடக்கும் கிழக்தும்,
இணைப்பும் பிரிப்பும்
எங்களுக்கு எதுவுமே புரியவில்லை.
வடக்கும் கிழக்கும்
பழைய இலங்கையின் பிரதேசங்கள் என்று
உறுதி எழுதுவதை உதறித்தள்ளுங்கள்.
"தமிழரின் தாயகம்" இதுஎன்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்.
பேச்சுக்களில் பிரச்சினையே இருக்காது.
பிரபாகரன் ஒரு தனிமனிதனின் பெயரல்ல.
எமது தேசிய விழிப்பின் தோற்றுவாய்
சலுகைகளுக்குத் தட்டேந்திய வரலாற்றை
உரிமைதேடும் திசையில் திருப்பிய காலத்தின் கல்லணை.
தென்றலின் சிறுகால்களில் கூட
புயலின் வேகத்தைப் பூட்டிய பிதாமகன்
பிரச்சினைகளின் மையப்புள்ளியைப் புரிந்துகொண்டு
பேசவருபவர்களே! வருக!
பிரபாகரனின் கைகள் வரவேற்கும்.
வடக்கு என்பது வடதமிழீழம்
கிழக்கு என்பது தென்தமிழீழம்
இணைக்கும் இடமே இதயபூமி
பிரிப்பதென்ற பேச்சுக்கே இடமில்லை.
நாங்கள் தெளிவாக இருக்கின்றோம்.
உறுதிக்காணிக்காரர் உட்கார்ந்திருக்க
வாடகைக் குடியிருப்பாளர்கள் வழக்காடுகின்றனர்.
எங்கள் மண்ணை இணைப்பதற்கும், பிரிப்பதற்கும்
உங்களுக்கு என்ன வாக்கெடுப்பு?
தாய்க்கு நிகரானது தாயகம்.
கையளவு மண்ணைக்கூட அள்ளுவதற்கு அனுமதியோம்.
சிங்களவர் தலதாமாளிகைக்குள்
இனிமேல் போகலாமா என்று
சர்வசன வாக்கெடுப்பு வைத்தால்
உங்களுக்கு எந்தளவு கோபம்வரும்.
கண்டியும் களுத்துறையும் இணைந்திருப்பதற்கு
தேர்தல்வைத்தே முடிவெடுப்பதெனில்
சிங்களவர் சீறமாட்டார்களா?
அந்தளவு கோபமே எங்களுக்கும்
கோபத்தின் நியாயத்தைப் புரிந்துகொண்டு;
இறந்தகாலத்தை எரித்துவிட்டு,
திறந்தமனத்தோடு வாருங்கள்.
விடுதலைக்காக விலைகொடுத்து நிற்பவர்களிடம்
சலுகைகளை தட்டிலேந்தி வராதீர்கள்.
உயிர்ப்பூக்களை கிள்ளிஎறிந்து
ஈகைச் சுடரேற்றும் எங்கள் மண்ணை



இனியும் ஏமாற்றலாமென்று நினையாதீர்.
"போர் என்றால் போர்
சமாதானம் என்றால் சமாதானம்"
சொன்னவர் இன்னும் சாகவில்லை.
உங்களுடன்தான் உள்ளார்.
அதையே நாங்களும் சொல்கிறோம்
மானத்தோடு தமிழன் வாழ்ந்தான் என்று
ஒரு வரலாறு வேண்டும்.
இலலையேல்,
வீரத்தோடு போராடி வீழ்ந்தான் என்று
ஒரு சரித்திரம் வேண்டும்.
இதுவே எங்கள் இறுதிமுடிவு.
நாங்கள் தெளிவாகவே இருக்கின்றோம்.
ஹொந்தாய் மல்லி!
ஆய்போவன்.

# சிறீலங்கா வான்படையின் பலம்




சிங்கள அரசின் தரைப்படைக்கும் - கடற்படைக்கும் சவாலாகப் **புலிகள் இயக்கம்** வளர்ந்துவிட்டது என்பது வெளிப்படையான உண்மை. ஆனால் சிங்கள வான்படை இன்னமும் 'தனிக்காட்டு ராஜா'வாகவே தமிழீழ வான்பரப்பில் ஆதிக்கம் செலுத்துகின்றதென்பதும் உண்மையாகும்.

ஈழப்போர் - 2 தொடங்கிய பின், சிங்கள அரசு தனது முப் படைகளினதும் ஆள் - ஆயுத பலத்தைப் பன்மடங்கு அதிகரித்துவிட்டது. ஆயினும் கடலில் புலிகள் பலம்பெறத் தொடங்கி, சிங்களக் கடற்படைக்கு அச்சுறுத்தல் எழத்தொடங்கிய பின்னர், சிங்கள அரசு தனது வான் பலத்தை பிரமாண்டமான அளவில் வளர்த்தெடுக்கத் தொடங்கிவிட்டது.

கடற்பலத்தைப் பயன்படுத்தி, தமிழீழத்தில் தனது படை முகாம்களைப் பயமின்றிப் பேணலாம என்ற சிங்கள அரசின் நம்பிக்கைக்கு கடற்புலிகள் குறுக்கே நின்றபோது, வான் பலத்தை அதிகம நம்பவேண்டிய நிலைக்குச் சிங்கள அரசு வநததில் வியப்பேதுமில்லை.

'ஈழப்போர் - 2' தொடங்கிய 1990 ஆம் ஆண்டு ஐயாயிரம் ஆட்தொகையைக் கொண்டிருந்த சிஙகள வான்படை, 1992 ஆம் ஆண்டு இரட்டிப்பாக - அதாவது பத்தாயிரம் ஆட்பலத்தைக்கொண்ட ஒரு படையாக - வளர்ந்தது. அதேவேளை இந்த வருடம் - 1994 ஆம் ஆண்டு - இத்தொகைபதினையாயிரத்தை எட்டிவிட்டது. அதாவது, ஈழப்போர் தொடங்கிய இந்த 4 வருடத்தில் வானபடையின் ஆட்பலம் மூன்று மடஙகு அதிகரித்துவிட்டது; அதேபோல, வான் படைக் கலங்களது பலத்தையும் அதிகரித்துள்ளது. 'சியா மாசெட்டி' குண்டுவீச்சு விமானங்களையும் மற்றும் 'அவ்ரோ' விமானம், 'பெல்' ரக உலங்குவானூர்திகளையும் பயன்படுத்திப் போரை நடாததிக்கொண்டிருநத சிங்கள வான் படை இபபோது, 'புக்காரா' போர் விமானங்களையும 'சுப்ப சொனிக்' என்றழைக்கப்படும் 'எவ்வ் - 7' சண்டை விமானங்களையும், 'வை - 8', 'வை - 12' இராட்சத விமானங்களையும் மற்றும் 'எம். ஐ. 8' ரக உலங்கு வானூர்திகளையும் புதிதாகக் கொள்வனவு செயது தமிழீழ வானை ஆக்கிரமித்துத் தனது பிடியை மேலும் இறுககிவிடடது.

ஆயினும் சிங்கள வான்படையின் இந்த வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் புலிகளின் வான் எதிர்ப்புப் போர்முறை வளர்ச்சியடையவில்லை. இதற்குப் பிரதான காரணம் நவீன வான் எதிர்ப்பு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு, பெருந்தொகையில் நிதி தேவைப்படுவதுதான்.


வான் மற்றும் கடல் சம்பந்தப்பட்ட சண்டைகளில் பயன்படுத்தப்படும் ஆயுத உபகரணங்கள் - தரைச்சண்டை உபகரணங்களைவிட மிக அதிக விலைகொண்டவை. ஆனாலும் சிங்கள அரசு இப்போது மேலும் மேலும் பணத்தைக் கொட்டி, பல நவீன வான்படைக் கலங்களை வாங்குவதில் அக்கறை செலுத்துகின்றது.

தற்போது சிங்கள வான்படையில் மொத்தம் 85 வான்கலங்கள் (விமானங்கள் - உலங்கு வானூர்திகள்) உள்ளன. அவையாவன:

1. **குண்டுவீச்சு விமானங்கள்**
   - I சியா மாசெட்டி ரகம் - 11
   - II புக்காரா ரகம் - 04
   - III எவ்வ் - 7 (சுப்ப சொனிக்) - 05
2. **உலங்குவானூர்திகள்**
   - I 'பெல்' ரகம் - 22
   - II எம். ஐ. 8 ரகம் - 03
   - III டொல்பின் ரகம் - 02
3. **வேவு விமானங்கள்**
   - I செஸ்னா ரகம் (சீபிளேன்) - 08
4. **போக்குவரத்து விமானங்கள்**
   - I வை - 8 ரகம் - 02
   - II வை - 12 ரகம் - 09
   - III அவ்ரோ ரகம் - 05
5. **பயிற்சி விமானங்கள்** - 12
6. **மற்றவை.** - 02



**எயார் மாஷல் ஒலிவர் ரணசிங்க வான்படைத் தளபதியாகப் பொறுப்பேற்றபோது**
''நான் சுபநேரம் வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.''




இதில் போர்க்களத்தில் புலிவீரர்களால் முற்றாக அழிக்கப்பட்ட அல்லது சேதத்துக்குள்ளாக்கப்பட்ட வான்கலங்களுடன், சீனன்குடா விமானப் படைத்தளத்தில் நடந்த விபத்தில் அழிந்த வான்கலங்கள் என்று, சிங்கள வான் படை கணிசமான இழப்பைச் சந்தித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

முதன்முதலில் 1979 ஆம் ஆண்டு, இரத்மலானையில் வைத்து ஒரு 'அவ்ரோ' விமானத்தைத் தகர்த்த புலிகள், சிறீலங்கா அரசுக்கு முதலாவது வான்கல இழப்பைக் கொடுத்திருந்தனர். அதன்பின் காரைநகர் கடற்கரையில் வைத்து 'சீபிளேன்' ஒன்றையும் புலிகள் அழித்திருந்தனர். அதைத் தொடர்ந்து மூதூரில் ஒரு 'பெல்' ரக உலங்குவானூர்தியையும், யாழ். கோட்டையில் ஒரு 'சியாமாசெட்டி' குண்டு வீச்சு விமானத்தையும், வவுனியாவில் ஒரு 'பெல்' உலங்குவானூர்தியையும், இயக்கச்சியில் ஒரு 'வை - 8' ரக இராடசத விமானத்தையும், மட்டக்களப்பு புனானையில் ஒரு உலங்குவானூர்தியையும், கடைசியாக பலாலியில் கரும்புலிகளின் கொமாண்டோ தாக்குதலில் ஒரு 'பெல்' உலங்குவானூர்தியையுமாக மொத்தம் எட்டு வான்கலங்ளை புலிகள் அழித்தனர். இவற்றுடன் பல வான்கலங்களைச் சேதப்படுத்தியும் உள்ளனர்.


நிலைமை இப்படியிருக்க 22. 09 1992 அன்று சீனன்குடா வியானத்தளத்தில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில், நான்கு குண்டுவீச்சு விமானங்களும் இரண்டு உலங்குவானூர்திகளும் மற்றும் பல பயிற்சி விமானங்களும் கடும்சேதமடைந்ததாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்திருந்தன.

இத்துடன் இந்த நான்காண்டுப் போரில் நூறிற்கும் மேற்பட்ட விமானப்படையினர் கொல்லப்பட்டுள்ளனர்; அதேயளவு தொகையினர் படுகாயமடைந்தனர்; அதேவேளை 150 வான்படையினர் விமானப்படையிலிருந்து ஓடியுள்ளனர் என்று சிங்கள வான்படை அறிவித்திருந்தது.

26. 01. 1992 அன்று அம்பாறை மாவட்டத்தில், அரந்தலாவை எனும் இடத்தில் நடந்த கணணிவெடிச் சம்பவம் ஒன்றில், ஒரு பேருந்தில் சென்றுகொண்டிருந்த 50 பேர் கொல்லப்பட்டிருந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் விடுமுறையில் வீடு சென்று பின் முகாம் திரும்



**சியா மாசெட்டி:** மணிக்கு 422 கி. மீ. வேகம்; 300 கி. கி. நிறையுடைய குண்டுகளைச் சுமந்து செல்லும்.



**புக்காரா :** மணிக்கு 500 கி. மீ. வேகம்; 1500 கி. கி. நிறையுடைய குண்டுகளை எடுத்துச் செல்லும்.
1A 58A Pucara



**சுப்ப சொனிக் F 7:** மணிக்கு 2178 கி. மீ. வேகம்; 1500 கி. கி. நிறையுடைய குண்டுகளைச் சுமந்துசெல்லும்.

பிக்கொண்டிருந்த விமானப்படையினர் என, கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்தன.

அதேவேளை 4. 7. 1992 அன்று திருக்கோணமலை பன்குளம் வீதியில் அமைந்துள்ள 4ஆம் கண்டம் விமானப்படை முகாமில் இருநது ரோந்துபோன சிங்கள வான்படையினர்மீது புலிகள் நடாத்திய அதிரடியில், எட்டு விமானப் படையினர் பலியாகியிருந்தனர்.

அதேபோல 22. 2. 92 அன்று திருமலையில் நடந்த அதிரடித்தாக்குதலில் 23 விமானப்படையினர் கொல்லப்பட்டதும், அவர்களிடமிருந்து 23 நவீன துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதும் தெரிந்ததே.

இதேபோல 5. 7. 92 அன்று இயக்கச்சி வான்பரபபில் வைத்துச் சுட்டுவீழ்த்தப்பட்ட வை - 8 விமானத்துடன், 19 விமானப்படையினரும் பலியாகியிருந்தனர்.

**அனுராதபுரத்தைத் தளமாகக்கொண்ட புக்காரா விமானங்கள் அங்கிருந்து பலாலி இறங்கு தளத்திற்குப் பறந்துவர 2ப நிமிடங்கள் பிடிக்கின்றன. அதேபோல கட்டுநாயக்காவைத் தளமாகக்கொண்ட சுப்ப சொனிக் என்றழைக்கப்படும் எ.்.வ் - 7 சண்டை விமானங்கள் அங்கிருந்து யாழ்ப்பாண வான் பரப்பில் நுழைய, 10 நிமிடங்கள் மட்டுமே எடுக்கின்றன.**

நிலைமை இப்படியிருக்க, சிங்கள வான்படையின் உயர் தளபதிகளிடமிருந்து கிடைக்கும் தகவல்களின்படி, தற்போது இருக்கும் 85 வான்கலங்களில் 45 வானகலங்கள் மட்டுமே விமானப் படையால் பயன்படுத்தக்கூடியவாறு உள்ளன; ஏனையவை பழுதாகிய நிலையில் பயன்படுத்த முடியாது கிடககின்றன.

இந்த 45 வானகலங்களும் விமானப்படையின் பரதான வான் தளங்களான ( Air Force - Bases) கட்டுநாயக்கா, இரத்மலானை, அனுராதபுரம், சீனனகுடா ஆகிய நான்கு இடங்களை மையமாகக்கொண்டு செயலாற்றுகின்றன. இந்த நான்கு வான்படைத் தளங்களிலும்தான் வானபடையானது தனது முழு அங்கங்களுடன் செயற்படுகின்றது. அதாவது படிமுறையான பதவிநிலை அதிகாரிகளையும் அவர்களது அதிகாரங்களுக்கேற்ப படை ஆட்களையும் - வான் கலங்களையும் கொண்டமைந்ததாக இந்த வான்படைத் தளங்கள் செயற்படுகின்றன.

அதேவேளை, தீவின் பதினான்கு இடங்களில் விமான இறங்கு தளங்களுடன்கூடிய வான் படைப் பிரிவுகள் (Air Force Units) செயற்படுகின்றன. தியத்தலாவ, அம்பாறை, மட்டக்களப்பு, ஹிங்குராங்கொட, கட்டுக்குருந்த, கக்கல, எக்கல, மொறவேவ, பலாலி, சிகிரியா, வவுனியா, வீரவெல, மன்னார், கொழும்பு ஆகிய இடங்களிலேயே இந்தப் பதினான்கு வான்படைப் பிரிவுகளும் நிலைகொண்டுள்ளன. ஒரு சிறு பிரிவை இங்கே நிரந்தரமாகநிறுத்திவைப்பதுடன், தேவை ஏற்படும்போது இந்த இறங்கு தளங்களை வான்படையின் விமானங்கள பயன்படுத்தித் தமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

குண்டு வீச்சு விமானங்களின் செயற்பாட்டிற்கு பலாலி இறங்குதளம் மிகவும் தேவையாகவும் - அந்தத்தேவைகளை ஈடுசெய்யக்கூடிய வசதிகள் இருந்தபொழுதிலும், விமானங்களுக்கான பாதுகாப்புக் காரணமாக பலாலியைச் சிங்கள வானபடை ஒரு வான் தளமாக (Air Force Base) பயன்படுத்துவதில்லை. அதற்குப் பதிலாக அத்தியாவசிய தேவைகள் ஏற்படும்போது, அனுராதபுரத்திலிருந்து அல்லது கட்டுநாயக்காவிலிருந்து பலாலிக்கு குண்டுவீசசு விமானங்கள் பறந்து வந்து நடவடிக்கைகளில் பங்குகொண்டுவிட்டு, மீண்டும் திரும்பச்சென்றுவிடுகின்றன.

அனுராதபுரத்தைத் தளமாகக் கொண்ட புக்காரா வமானங்கள் அங்கிருந்து பலாலி இறஙகு தளத்திற்குப பறந்துவர 20 நிமிடங்கள் பிடிக்கின்றன. அதேபோல கட்டுநாயக்காவைத் தளமாகக் கொண்ட சுப்ப சொனிக் என்றழைக்கப்படும் எஃவ் - 7 சண்டைவிமானங்கள் அங்கிருந்து யாழ்ப்பாண வான் பரப்பில் நுழைய, 10 நிமிடங்கள் மட்டுமே எடுக்கின்றன. எனவே அனுராதபுரத்திலிருந்தும் - கட்டுநாயக்காவிலிருந்தும பறநதுவந்து, தேவையானால் பலாலி இறங்கு தளத்தைத் தற்காலிக இருப்பிடமாகக் கொணடு ஒரு திடீர்த் தாக்குதல் நடவடிக்கையில் பங்குகொண்டுவிட்டு, மீண்டும் அந்தந்தத் தளங்களுக்கே சென்றுவிடுவது வான்படைக்குக் கடினமில்லாத ஒன்றாக இருக்கின்றது.

புக்காரா குண்டுவீச்சு விமானங்கள், எஃவ் - 7 சுப்ப சொனிக் விமானங்கள், எம்.ஐ.8 உலங்கு வானூர்திகள் என்பவற்றை சிங்கள அரசு கொள்வனவுசெய்தபின், வான்படையின் சண்டையிடும் ஆற்றல் பெருகியுள்ளதாக, வான் படைத் தளபதிகள் கூறுகின்றனர். இதில் பிரதானமாக புக்காரா குண்டுவீச்சு விமானம், புலிகளுக்கு எதிரான போரில் வான்படைக்கு நன்கு உதவுவதாக அதன் தளபதிகள் பெருமைப்படுகின்றனர். அதற்கு அவர்கள் சில காரணங்களைக் கூறுகின்றனர். சியா மாசெட்டி குண்டுவீச்சு விமானத்தைவிட ஆறு மடங்கு குண்டுகளைச் சுமந்துசென்று இலக்குகள்மீது போடவல்ல சக்தி புக்காராவுக்கு உண்டென்பது, அதில் ஒன்று.

சியா மாசெட்டி விமானமானது 125கி.கி நிறையுடைய இரண்டு குண்டுகளை அல்லது 50 கி.கி. நிறையுளள ஆறு குண்டுகளை மட்டுமே ஒரு பறப்பன்போது சுமநதுசெல்ல வல்லது.


ஆனால் புக்காரா விமானமானது ஒரு பறப்பன்போது 125கி.கி. எடையுள்ள 12 குண்டுகளை அல்லது 500கி.கி. எடையுளள 03 குண்டுகளைச் சுமந்து சென்று போடவலலது. அதனுடன் புக்காரா..வின் இரண்டு சிறகுகளிலும் பொருத்தப்பட்டுள்ள இரண்டு பீரங்கிகள் புக்காராவுககு மேலும் பலம கொடுக்கின்றன என்று, வான்படைத் தளபதிகள் பெருமைகொள்கின்றனர்.

ஆனால் உண்மை வேறுவிதமாகத்தான் உள்ளது. சிங்களத் தளபதிகள பெருமையாகச் சொலலும் இத்தகைய நவீன வானகலஙகளை சிங்கள அரசு வாங்கியபின், இவற்றைப் பயன்படுத்தி சிங்கள வானபடை எதைச் சாதித்தது? எநதப் போர்முனையை வெலல உதவியது அலலது எத்தகைய பின்னடைவை இது புலிகள் இயக்கத்திற்கு ஏற்படுத்தியது என்று கேட்டால், குடிமனைகளை அழித்து மக்களைக் கொன்றதைத் தவிர, போர்க்களத்தில் இவை பெரிதாக எதையும் சாதிக்கவில்லை என்றுதுணிந்து கூறலாம்.


சுப்ப சொனிக் என்றழைக்கப்படும் எ.:வ்-7 சண்டை விமானத்தைப் பொறுத்தவரை, அதை வான் படையின் ஒரு ஊதாரிப் பிள்ளை



**பெல் 212: (Bell 212)** மணிக்கு 185 கி. மீ. வேகம்; 14 பேர் பயணம் செய்ய முடியும்; இயந்திரத் துப்பாக்கிகள் - உந்துகணைகள் பொருத்தலாம்.



**எம். ஐ. 8: (Mill Mi 8)** மணிக்கு 250 கி. மீ. வேகம்; 28 பேர் பயணம் செய்யலாம்; இயந்திரத் துப்பாக்கிகள் - உந்துகணைகள் பொருத்தலாம்.



என்றே அழைக்கலாம். ஏனெனில் பெரும் செலவுடன் இயக்கப்படும் ஒரு விமானம் என்பதுடன், விடுதலைப் போராட்டங்களுக்கெதிராக இவ் விமானத்தைச் சரியாகப் பயன்படுத்த முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

உண்மையில் சுப்ப சொனிக் கொள்வனவிற்கும் எமது போர்க்களத்திற்கும் சம்பந்தமில்லை. இந்திய விமானங்கள் சிறீலங்காவின் வான் பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசிப்பதைத் தடுப்பதற்கென்ற நோக்கத்துடனேயே, சீனாவிலிருந்து இந்தவகை விமானங்கள் கொள்வனவுசெய்யப்பட்டன ஆனால் இந்த எஃவ்-7ஐ விட வேகமும் ஆற்றலும்கொண்ட மிராஜ் 2000 மற்றும் மிக்-29 போன்ற சண்டை விமானங்களை இந்திய வான்படை வைத்திருக்கின்றது என்பது கவனிக்கத்தக்கது.

இருந்தபொழுதிலும் இந்த சுப்ப சொனிக்கைப் பயன்படுத்தி தமிழீழ மக்கள்மீது ஒரு உளவியல் போரைச் சிங்கள வான்படை தொடுத்துவருகின்றது. திகிலை ஊட்டும் அதன் பேரிரைச்சலும் சத்தத்தை வைத்துக் கண்டுபிடிப்பதில் இருக்கும் கடினமான தன்மையும் மக்களிடையே அவ்விமானம் தொடர்பான அச்சததை ஏற்படுத்தியுள்ளதை மறுக்கமுடியாது அத்துடன் கட்டாயம் குடிமனைமீதுதான் குண்டுவிழும் என்றொரு பயமும் சுப்ப சொனிக்கைக் கண்டதும் மக்களுக்கு ஏற்பட்டுவிடுகின்றது.

ஆயினும் எமது வான் பரப்பிற்குள் இவை வந்துவிட்டன என்ற சேதியை அறிவிக்கும் விமான இரைச்சல் கேட்டவுடனேயே - அது புக்காராவோ அல்லது சுப்ப சொனிக்கோ - பதுங்குகுழிக்குள் போய்விடுவது மக்களிற்கிருக்கும் ஒரு பாதுகாப்பான தற்காப்புவழியாகும். புலிவீரர்களைப் பொறுத்தவரை சமர்க்களங்களில் நகரும்போதும் தங்கிநிற்கும் போதும் உருமறைப்புகளை பயன்படுத்துவதுடன், குவிந்துநிற்பதைத் தவிர்ப்பது இழப்புகளை இல்லாதுசெய்ய அல்லது குறைக்க சிறந்த வழியாகும்.


அதேவேளை, விமானங்கள் குத்திப் பதிந்து தாக்குதல்களை நடாத்தவரும்போது அதன் மூக்குநுனியைநோக்கி - பதற்றமில்லாது, இலக்கு வைத்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் இவ்விதம் குத்திப் பதிந்து தாக்கவரும்போது விமானங்களின் முன பாகம் - அது சுப்ப சொனிக்காக இருந்தாலும் - முட்டைக் கோதைப்போல மிக மென்மையாக பாதுகாப்பற்று இருக்கின்றது. அதனூடாக ஒருசில ஏ. கே. ரவைகள் உட்சென்றுவிட்டாலேயே விமானத்தை வீழ்த்த அவை போதுமானவையாகிவிடும்; அல்லது அப்படியான துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு ஈடு கொடுக்கப் பயப்படும் விமானிகள், தாழப்பறந்து குண்டு வீசுவதைக் கைவிட்டு, உயரத்திற்கே சென்று, இலக்கின்றிக் குண்டுகளை வீசிவிட்டுத் திரும்பிவிடுவர்.

சிறீலங்கா வான்படைக்கு பக்கபலமாக இருந்து, சகலவிதமான பயிற்சிகளையும் போர் விமானங்களையும் அதற்குரிய ஆயுதங்களையும் வழங்கும் நாடுகளாக, சீனாவும் - பாகிஸ்தானும் முன்னணியில் உள்ளன. இதுதவிர ரஷ்யா, ஆர்ஜென்ரைனா, இத்தாலி போன்ற நாடுகளிலிருந்தும் சிங்கள வான்படை தனக்குத் தேவையானவற்றைப் பெற்றுவருகின்றது.

1951ஆம் ஆண்டு 106 பேருடன் ஆரம்பிக்கப்பட்ட சிறீலங்கா வான்படை தொடக்கத்தில், 'றோயல் விமானப்படை' என்றே அழைக்கப்பட்டது. பிரிட்டனின் விமானப்படையான றோயல் விமானப்படையின் பெயரையே இங்கும் சூட்டியதுடன், பிரிட்டனின் அதிகாரிகளே இவ்வான்படையின் தளபதிகளாகவும் - உயரதிகாரிகளாகவும் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆயினும் 1965ஆம் ஆண்டு இது சிங்களவர் மயப்படுத்தப்பட்டது. 1972ஆம் ஆண்டு சிறீலங்கா குடியரசாக்கப்பட்டதை அடுத்து, 'சிறீலங்கா வான்படை' எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. சிறீலங்கா வான்படை ஆரம்பிககப்பட்டதிலிருந்து 1971 ஏப்ரில் மாதம் ஜே. வி. பி. இயக்கம் நடாத்திய கிளர்ச்சிக் காலகட்டம் நீங்கலாக, தமிழீழ விடுதலைப் போராட்டம் கூர்மைபெறத் தொடங்கிய 1983ஆம் ஆண்டுக் காலகட்டம்வரை, சிறீலங்கா வான்படை உல்லாசப் பிரயாணிகளைக் காவித்திரியும் பணியுடன், வெள்ளப்பெருக்குகள்- விபத்துகள் ஏற்படும் வேளைகளில் மீட்புப் பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

**ஒரு புக்காரா விமானத்தைக் கொள்வனவு செய்ய 121 கோடி ரூபா செலவாகின்றது; ஒரு வை - 8 போக்குவரத்து விமானத்தை வாங்க சுமார் 50 கோடி ரூபா செலவாகின்றது; எம். ஐ. 8 ரக உலங்கு வானூர்தி ஒன்றை 25 கோடி ரூபா கொடுத்து வாங்குகின்றது.**

ஆயினும் 1984ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சிங்கள வான்படையின் உலங்குவானூர்திகள் போருக்குப் பயன்படுத்தப்படத் தொடங்கிவிட்டன. அத்துடன் 1986ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அவ்ரோ விமானங்களும், சியா மாசெட்டி ரக குண்டுவீச்சு விமானங்களும் போரில் முக்கிய இடத்தையும் பிடித்துக்கொண்டன. அன்றிலிருந்து இன்றுவரை சிங்கள வான்படை தனது பலம் முழுவதையும் புலிகள் இயக்கத்துடன் போரிடுவதிலும் - மக்களைக் கொன்று அடிபணியச் செய்வதிலும் செலவிடத்தொடங்கியது-



**வை - 8 :** மணிக்கு 550 கி. மீ. வேகம்; போக்குவரத்து விமானம்.
**(Yunshuji - 8)** 300 கி. கி. எடையுடையஎட்டுக்குண்டுகளை எடுத்துச்செல்லும்.

சிங்கள அரசு போருக்குச் செலவிடும் பணத்தில் கணிசமான பங்கை, வான்படைக்கான போர்க்கலங்களைக் கொள்வனவு செய்வதில் செலவிடுகின்றது.


ஒரு புக்காரா விமானத்தைக் கொள்வனவு செய்ய 121கோடி ரூபா செலவாகின்றது; ஒரு வை -8 போக்குவரத்து விமானத்தை வாங்க சுமார் 50 கோடி ரூபா செலவாகின்றது; எம். ஐ . 8 ரக உலங்குவானூர்தி ஒன்றை 25கோடி ரூபா கொடுத்து வாங்குகின்றது.

சிங்கள வான்படையிடம் இருக்கும் வான் கலங்களின் எண்ணிக்கையை இந்த விலைப்பணத்துடன் சேர்த்துப் பெருக்கிப்பார்க்கும்போது, சிங்கள அரசு தனது வான்படைக்குச் செய்திருக்கும் செலவைக் கணிப்பிடமுடியும். வான் கலங்கள் மட்டுமல்ல வான் கலங்களிலிருந்து பயன்படுத்தப்படும் றொககட்டுகளும், குண்டுகளும் பீரங்கிக் குண்டுகளும்கூட, பெரும் பணச் செலவுடன் கொள்வனவு செய்யப்படுபவைதான். பொருளாதாரரீதியாக பல நெருக்கடிகளைச் சந்தித்தபோதும், சிங்கள அரசானது வான்கலங்களை வாங்குவதை - நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதை - குறைக்கவில்லை; தொடர்ந்தும் அது தனது வான் பலத்தை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

சிங்கள அரசின் வான்பலத்தைச் செயலற்றதாக்குவதற்கு போர்த்திறனும் - ஈகமும் மட்டும் போதாது; நவீன வான் எதிர்ப்பு ஆயுதங்களும் வேண்டும். வான் எதிர்ப்பு ஆயுதங்கள் புலிகள் இயக்கத்திடம் இருக்குமாக இருந்தால், பல கோடி ரூபா பெறுமானமுள்ள போர் விமானங்களை அடித்து வீழ்த்திச் சிங்கள வான்படையைப் பலமிழக்கச்செய்வதுடன், சிங்கள அரசையும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ள முடியும்.

**கடற்பலத்தைப் பயன்படுத்தி, தமிழீழத்தில் தனது படை முகாம்களைப் பயமின்றிப் பேணலாம் என்ற சிங்கள அரசின் நம்பிக்கைக்குக் கடற்புலிகள் குறுக்கே நின்றபோது. வான்பலத்தை அதிகம் நம்பவேண்டிய நிலைக்குச் சிங்கள அரசு வந்ததில் வியப்பேதுமில்லை.**

ஆனால் இந்த வான் எதிர்ப்பு ஆயுதங்களைக் கொள்வனவுசெய்யப் பெருந்தொகைப் பணம் வேண்டும். ஆகவே சிங்கள அரசின் வான் பலத்தைச் சிதைப்பதென்பது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழுகின்ற எமது மக்களின் கைகளில்தான் தங்கியுள்ளது.



**வை — 12 :** மணிக்கு 292 கி. மீ. வேகம்; போக்குவரத்து விமானம்.
**(Yunshuji - 12)**



**அவ்ரோ :** மணிக்கு 320 கி.மீ. வேகம்.
**(HS - 748 - U.K.)**

# ஜொனி மிதிவெடிகள் : பெயரிடலும் வரலாறும்

**1987** ஒக்ரோபர் 10.

இந்தியப் படையுடன் போர் தொடங்கி விட்டது.

அடுத்தநாள் -

கொக்குவில் பிரம்படி வீதியில் இருந்த தலைவரின் பாசறையை இலக்கு வைத்து, இந்தியப் படையின் சிறப்புக் கொமாண்டோக்கள் தாக்குதலைத் தொடுத்தனர். அவர்களின் முயற்சி வெற்றிபெறவில்லை. ஆனாலும் தலைவர் தனது பாசறையை இடம் மாற்றிக்கொண்டார்.

'ஒப்பறேசன் பவான்' என்ற பெயரில் புகழ்பெற்ற யாழ்ப்பாணச் சமரை இந்தியப் படைகள் தொடர்ந்தன.

''ஓரிரு நாட்களுக்குள் எல்லாம் முடிந்துவிடும்'' என்றார்கள் இந்தியத் தலைவர்கள்.

ஆனால் 'யாழ்ப்பாணச் சமர்' ஒரு யாதம் நீடித்தது.

போரைத் தொடர்ந்து வழிநடாத்துவதற்காக தலைவர் தளத்தை மாற்றிக்கொண்டார். சில வாரங்கள் கழித்து இந்தியத் தளபதிகளும் இதை அறிந்துகொண்டுவிட்டனர்.

ஆனால் யாழ்ப்பாணத்தைவிட்டு தலைவர் எங்கு சென்றிருப்பார் என்பது, இந்தியத் தளபதிகளுக்குப் புதிராகவே இருந்தது.

வன்னிக்குச் சென்றாரா?

அல்லது மன்னார் பெருங்காட்டிற்கு சென்றுவிட்டாரா?

அல்லது கொக்கிளாய் ஆற்றைக் கடந்து திருக்கோணமலைக்குச் சென்றாரா?

அல்லது அங்கிருந்து மட்டக்களப்பு மாவட்டத்துக்குள் சென்றுவிட்டாரா?

வரைபடத்தை விரித்துவைத்துவிட்டு இந்தியத் தளபதிகள் குழம்பத் தொடங்கினர்.

தலைவரின் இருப்பிடத்தைக் கண்டறிந்து சொல்வதில் சிங்களப் புலனாய்வுத் துறையும் பெருமுயற்சி செய்தது. ஆனாலும், தலைவரின் இருப்பிடம் தொடர்பான ஊகங்களைத் தவிர, சான்றுகளைப் பெறமுடியவில்லை.

தலைவரைத் தேடி இந்தியப் படைகள் வன்னிப் பெருநிலத்திலும், தென்தமிழீழத்திலும் மோப்பம் பிடித்துத் திரிந்தன.

இதேவேளை தமிழ்நாட்டில் தங்கியிருந்த கிட்டண்ணை, இந்தியப் படையுடன் போர்நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவந்து பேச்சுவார்த்தை நடாத்த முயன்றபடி இருந்தார்.

இந்திய அரசின் சம்மதத்தைப் பெற்று லெப். கேணல் ஜொனியை தலைவரிடம் அனுப்பி, அவரின் கருத்துக்களையும் - பணிப்புக்களையும் பெற கிட்டண்ணை முடிவெடுத்தார்.

கிட்டண்ணையின் வேண்டுகோளை இந்தியப் படை ஏற்றது. ஆனால் ஜொனி இரகசியமாக தமிழீழத்திற்குச் செல்வதை அது தடுத்தது.

ஜொனி செல்லவிரும்பும் இடத்திற்கு தாங்களே கூட்டிச்சென்று பாதுகாப்பாக விட்டுவிடுவதாக இந்தியத் தளபதிகள் பாசாங்கு செய்தனர்.

ஜொனியின் பயணத்தைப் பயன்படுத்தி தலைவரின் இருப்பிடத்தை அறிந்துகொள்ள அவர்கள் திட்டமிட்டனர்.

இந்தியத் தளபதிகளின் நோக்கம் தெரியாத ஒன்றல்ல. ஆயினும் அவர்களது கட்டளையை ஏற்கவேண்டிய தேவையும் நிர்ப்பந்தமும் இருந்தன.

இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

இந்தியப் படை வவுனியாவரை ஜொனியைக் கூட்டிச்சென்று விட்டுவிடுவது என்றும், அதன்பின் ஜொனி தானாகவே தலைவரைத் தேடிச்சென்று சந்தித்து மீண்டும் வவுனியா இந்தியப் படை முகாமுக்கே திரும்பி வந்துவிடுவது என்றும், இணக்கம் காணப்பட்டது.

இந்தியத் தளபதிகளும் இதற்கு இணங்கினர்.

ஜொனியை வவுனியா கொண்டுசென்று இறக்கிவிடு முன்னரே, வன்னிப் பெருநிலத்தில் ஜொனியின் பயணத்தைக் கண்காணிக்க இந்தியத் தளபதிகள் ஏற்பாடுகளைச் செய்தனர்.

ஜொனி வவுனியா கொண்டுவந்து விடப்பட்டார்.

தேசவிரோதக் கும்பல்களினதும், அவர்களது உளவாளிகளினதும் மற்றும் பதுங்கியிருக்கும் இந்தியச் சிப்பாய்களினதும் கண்களில் படாது சுற்றிச் சுழன்று, தலைவரின் இருப்பிடத்திற்கு விரைந்தார்.

தலைவரைச் சந்தித்தார் - கிட்டண்ணையிடம் சொல்லவேண்டிய விடயங்களை மனதில் பதித்தார். மீண்டும் வவுனியா நோக்கி பயணத்தைத் தொடங்கினார்.

பயணத்தின் ஒரு கட்டத்தில் புதுக்குடியிருப்புக்கு வந்து, அங்கிருந்து சைக்கிள்மூலம் விஸ்வமடுவரை செல்ல முயன்றுகொண்டிருந்தார்.

தேவிபுரத்திற்கு அருகே உள்ள காட்டாறு ஒன்றிற்குள், ஜொனியின் பயணப் பாதையை அறிந்துகொள்ளப் பதுங்கிக்கிடந்த இந்தியச் சிப்பாய்களின் துப்பாக்கி வீச்செல்லைக்குள், ஜொனியின் சைக்கிள் சென்றுவிட்டது.

ஜொனி மீண்டும் வவுனியா திரும்பும்வரை வன்னிப் பெருநிலத்தில் இராணுவ நடவடிக்கைகள் எதையும் செய்யமாட்டோம் என்ற இந்தியத் தளபதிகளின் வாய்மொழி வாக்குறுதியையும் மீறி, ஜொனி சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தும் தந்திரோபாயத்தை இந்தியத் தளபதிகள் கடைப்பிடித்தனர்.

ஜொனியின் பயணத்தைப் பயன்படுத்தி தலைவரின் இருப்பிடத்தை சரியாகக் கண்டறிவது ஒன்று; மற்றையது புலிகளின் தளபதியை தந்திரோபாயமாகக் கொன்றுவிடுவது.

இரண்டையுமே இந்தியத் தளபதிகள் அடைந்துவிட்டனர்.

வவுனியாவுக்கு மேற்குப் புறத்தில் இருக்கும் மன்னாரிலோ அல்லது கொக்கிளாய் வாவிக்கு அப்பாலுள்ள தென்தமிழீழத்திலோ தலைவர் இல்லை; அவர் மணலாற்றுக் காட்டிற்குள்தான் பாசறை அமைத்து இருக்கின்றார் என்பதை ஜொனியை தடயமாக வைத்து அறிந்துகொள்ள, இந்தியத் தளபதிகளுக்கு வெகுநேரம் பிடிக்கவில்லை.



'இராசா' கண்டுபிடிக்கப்பட்டுவிட்டார். ஆகவே இராசா இனி நகர முடியாது என்று நினைத்துக்கொண்டு, இந்தியப் படைகள் 'செக்மேற்' சொன்னார்கள்.

ஜொனி சுட்டுக்கொல்லப்பட்டதும் அடுத்து என்ன நடக்கவிருக்கின்றது என்பதை தலைவர் ஊகித்தறிந்துகொண்டுவிட்டார்.

இன்னும் சில வாரங்களில் இந்தியப் படைகள் மணலாறு மீது ஒரு பெரும் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வார்கள் என்று தலைவர் எதிர்பார்த்தார்.


வெள்ளம்போல் காட்டுக்குள் நுழையப்போகும் இந்தியச் சிப்பாய்களுடன் மரபுவழிச் சமரை நடாத்துவது எளிதல்ல என்பதும், தலைவருக்குத் தெரியும். அதற்காக பின்வாங்கிச் செல்லவும் - அவர் விரும்பவில்லை. ஏனெனில் அது புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியாக அழித்துவிடும் என்று, அவர் உறுதியாக நம்பினார். தமிழீழ தேசியத்திற்குக் கவசமாக இருக்கும் புலிகளின் இராணுவ பலம் சிதைக்கப்பட்டால், தமிழினம் அரசியல்ரீதியாக ஒடுக்கப்பட்டுவிடும் என்று தலைவர் அஞ்சினார்.

ஆகவே இந்தியப் படையுடனான போரை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்லவேண்டிய வரலாற்றுக் கடமை தன்மீதே இருக்கின்றது என்பதை நன்குணர்ந்த தலைவர் அவர்கள், **சாதிக்க அல்லது சாக முடிவெடுத்தார்.**

மணலாற்றைத் தளமாக்கிய அடுத்த கணத்திலிருந்தே ஒரு பெரும் காட்டுச் சமருக்காக காட்டையும் - போராளிகளையும் ஏற்கெனவே தலைவர் தயார்ப்படுத்தியிருந்தார்.

இப்போது, முல்லைத்தீவு மாவட்டத்திலும்- மணலாற்றுக் காட்டிற்குள்ளும் இருந்த சிலநூறு புலிவீரர்களை, ஒரு பெரும் சண்டைக்குத் தயாராக்கினார்.

காட்டிற்குள் நுழையப்போகும் இந்தியப் படைகளின் சுதந்திரமான நகர்வைக் குழப்புவதன்மூலம் சில இராணுவ சாதனைகளைப் படைக்க முடியும் என்றும், இவ்விதம் பல இராணுவ சாதனைகளை நிகழ்த்துவதன்மூலம் இந்தியப் படையின் இராணுவ நடவடிக்கையை முறியடிக்க முடியும் என்றும், தலைவர் எண்ணினார். இந்த இராணுவ சாதனைகள் ஒரு உளவியல் போருடன் கலந்து செய்யப்படுமானால், அது இரட்டிப்புப் பலனைக் கொடுக்கும் என்றும் அவர் எதிர்பார்த்தார்.



ஒரு தரைப்படை வீரனை கனவிலும் அச்சுறுத்துவது மிதிவெடிகளும் - பொறிவெடிகளும், கண்ணிகளும்தான். இப்படியான சந்தர்ப்பங்களில், தூக்கிய ஒரு காலைக் கீழே வைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒரு படைவீரன் செத்துப் பிழைக்கின்றான் இந்த மிதிவெடிகளை, எறும்புக்கூட்டம்போல வரவிருக்கும் இந்தியச் சிப்பாய்களுக்கு எதிராகப் பயன்படுத்தினால் நல்ல பலனைக் காணலாம்.

ஆனால் உயர் தொழில்நுட்பத்துடன் உற்பத்திசெய்யப்பட்டு இறக்குமதி செய்யப்படும் இத்தகைய மிதிவெடிகளுக்கு நாம் எங்கே போவது?

தலைவரது கனவிலும் - நினைவிலும் இந்தக் கேள்வியே உதித்து விடைதேடப் போராடியது.

ஒருநாள் அதிகாலை நான்கு நான்கரை மணியிருக்கும் -

காட்டுப் பாசறையில் தனது படுக்கையில் இருந்தபடி சிந்தித்துக்கொண்டிருநத தலைவர் அவர்கள் திடீரென எழுந்து, சில நூறுயார் தள்ளி இருந்த பாசறையில் தங்கியிருந்த இராணுவ தொழில்நுட்பப் பிரிவின் பொறுப்பாளர்களைத் தேடிச்சென்றார்.

தனது மனதில் தோன்றிய மிதிவெடி தயாரிப்புப் பொறிமுறைபற்றி அவர்களுக்கு அப்போதே விளக்கிக்கூறினார்.

காட்டிலேயே கிடைக்கக்கூடிய மரந்தடி - ரின்பால் பேணி, மற்றும் 'றபர்பான்ட்' என்பவற்றைக் கொண்டு, சிறுபிள்ளைகள் விளையாடும் 'கெற்றப் போலின்' தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி மிதிவெடிகளைத் தயாரிககமுடிம் என்று தலைவர் விளக்கி, நம்பிக்கையூட்டிக்கொண்டிருந்தார்.

பரீட்சார்த்த முயற்சிகள் தொடங்கின.

சிறுதொகையில் வெடிமருந்தும், 'பென்ரோச்' பற்றரியும், 'டெற்றொனேற்றரும்' தவிர மிகுதி அனைத்துப் பொருட்களும் உள்ளூர்ப் பொருட்கள்.

இறுதியில் முயற்சி வெற்றிகண்டது.

இப்போது இந்தியப் படைகள் மணலாற்றுக் காட்டைச் சூழ பல்லாயிரக் கணக்கில் விரைவாகக் குவிக்கப்பட்டனர். அதற்கு **ஒப்பரேசன செக்மேற்** எனப் பெயரிட்டனர்.

மெதுவான வேகத்தில் மிதிவெடி தயாரிப்புத் தொடங்கியது.

அந்த மிதிவெடிக்குத் தலைவர் பெயரிட்டார் -

**ஜொனி மிதிவெடி.**

இந்தியப் படைகள் காட்டுச் சமரைத் தொடங்கின.

ஜொனிக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டு காட்டுக்குள் நுழைந்த இந்தியப் படைக்கு, 'ஜொனி மிதிவெடி'கள் நம்பிக்கைத் துரோகம் செய்யத்தொடங்கின.

ஜொனியின் பயணத்தை நயவஞ்சகமாகப் பயன்படுத்தி 'பாதை' கண்டுபிடித்த இந்தியப் படைகளுக்கு இப்போது, ஜொனி மிதிவெடிகள் பாதத்தைக் கழற்றிக்கொண்டிருந்தன.

இந்தியப் படைகள் எண்ணியதைப்போல தலைவரை அழிக்க முடியவில்லை.

செக்மேற் 1......2......3 என இராணுவ நடவடிக்கை தொடர்ந்தது. 100......200...... 300 என இந்தியப் படைகளின் கால்களும் கழற்றப்பட்டன.

'செக்மேற்' அவமானத்துடன் முடிவடைந்தது.

ஜொனி மிதிவெடிகள் புத்துயிர் பெற்று புதுவேகம் கண்டன.

செக்மேற் முறியடிப்பின் முதுகெலும்பு ஜொனி மிதிவெடிகள்.

ஒரு பெரிய வரலாறு இம் மிதிவெடிக்குள்ளும் இப்பெயர்சூட்டலுக்குள்ளும் ஒளிந்து கிடக்கிறது! ○

# இலட்சிய உறுதியில் இரும்பு மனிதர்கள்

படையியலின் மையநோக்கம் வெற்றி.

வெற்றியின் அடைவு வழி போர்.

போரின் மூலக்கூறுகளுக்குள் முதன்மையானதாக அமைகின்றது வேவு.

போரிற்கான செயற்பாடுகளுக்குள் இன்றியமையாத ஒரு பாத்திரம் வேவுப்பணிக்கு உண்டு.

சண்டையொன்று முடியும்போது, முழுவெற்றி பெற்றதாக அது நிறைவாகக்கூடிய வகையில், அதனுடைய ஆரம்பத்தை அமைத்துவிடவேண்டிய பெரும் பொறுப்பு வேவுவீரர்களையே சாருகின்றது.

வேவுத் தரவுகளில் இருந்துவிடும் சிறு தவறும்கூட, நடவடிக்கையின்போது படுதோல்வியைத் தந்துவிடும் என்பது ஒருபுறம் போக, பெருத்த உயிரிழப்பையும், போராட்டத்தில் பின்னடைவையும்கூட அது ஏற்படுத்திவிடக்கூடும்.

எனவேதான், யுத்தத்தில் அதிக பெறுமதியானவனாக ஒரு வேவு வீரன் திகழ்கின்றான்; போர் சார்ந்த பணிகளில் ஈடுபடுகின்றவர்களுள் வேவு வீரர்கள் முக்கியத்துவம் பெறுகின்றார்கள்.

இதன் காரணமாகவே 'படையியல் விஞ்ஞான,'த்தின் (Military Science) கற்கைநெறிகளுக்குள, பிரதானத்துவம் மிக்க ஒரு பாடத்திட்ட அலகாக 'இராணுவ வேவு' (Military Reconnissance) புகட்டப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் படைவீரர்கள் வெற்றிக் கொடிகளை நாட்டிய தாக்குதல்களிலெல்லாம், அந்த வெற்றிகளைப் பரிசளித்த பெருமை, எங்களது வேவு வீரர்களையே சாருகின்றது.

எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் - எத்தனையோ சிக்கல்களுக்கு இடையில் - தாங்கிக் கொள்ள முடியாத துன்பங்களோடுதான், வேவுகாண் பணியை அவர்கள் செய்கின்றார்கள்.



*பயிற்சியின்போது கரும்புலி வீரர்கள்*

**தங்களது உயிர் அழிந்துவிடப்போவதைப் பற்றியல்ல; தங்களது இலக்குகள் அழிக்கப்பட வேண்டியதைப் பற்றியே அவர்கள் சதா சிந்தித்துக்கொண்டிருந்தார்கள்.**

வாழ்வுக்கும் சாவுக்கும் இடைப்பட்ட அந்தப் போரியல் பணி, அவர்களுடைய அபாயகரமான வாழ்வு. முற்றிலும் வேறுபாடான அந்த அனுபவத்தை மற்றவர்களால் பரிபூரணமாகப் புரிநது கொள்ள முடியாது. அந்த உணர்வுத் தன்மை சற்றும் குறையாமல் அதனை எடுத்து விளக்குவதுகூட கடினமானது.

எத்தகைய இடர்பாடுகளுக்கு நடுவில் நின்று, எத்துணை மனத்துணிவோடு அந்தப் பணியில் அவர்கள் ஈடுபடுகின்றார்கள் என்பதனை, வார்த்தைகளால் கொடுக்கப்படும் வடிவத்திற்குள் முழுமைப்படுத்திவிடவும் முடியாது.

எங்களது வேவுகாண் வீரர்களது ஒவ்வொரு பயணமும், மரணத்தின் சாம்ராஜ்ஜியத்தை நோக்கியது. 'திரும்பி வருவேன்' என்ற எண்ணம் அவர்களிடத்தில் இருக்காது; ஆனால், 'திரும்பி வர வேண்டும்' என்ற உறுதிப்பாடு இருக்கும்.

தங்களது கையில் ஒரு போர்ச்சாதனை மட்டுமல்ல, எங்கள் அன்புக்கினிய மக்களின் எதிர்காலமும் உள்ளது என்பதை அவர்கள் அறிவார்கள்.

வேவுகாண் பணியானது, அசாதாரணமான ஒரு படையியல் தொழிற்பாடு. போர்வீரர்களாக இருக்கின்றவர்களிலும்கூட, எல்லோராலும் அந்தப் பணியில் ஈடுபடமுடியாது - அது எங்களது போராளிகளாக இருப்பினும்கூட.

கண்துஞ்சாது, பசிநோக்காது, மெய்வருத்தம் பாராது, வெயில் - மழை - பனி - குளிர் - பொருட்படுத்தாது, மைல் கணக்காக நடந்தும், நாட்கணக்காகக் கிடந்தும் - கருமமே கண்ணாக செயற்படவேண்டிய மிகக் கடுமையான ஒரு வாழ்வுமுறைக்குள் - ஓய்வற்று இயங்கித் தொடர்ச்சியாக நின்றுபிடிக்கக்கூடிய உடலுறுதியும், உளவுறுதியும் இருக்க வேண்டும்.

சருகு நெரிபடும் சத்தத்திற்கும் 'சடசடக்கத்' தயாராக - ரவைச்சங்கிலிகள் பொருத்திய இயந்திரத் துப்பாக்கிகளுடன் - நிமிடத்திற்கு நிமிடம் வெளிச்சம் பாய்ச்சித் தேடிக்கொண்டு திரியும் சிப்பாய்களுக்கு முன்னால் - அவர்களது கண்பார்வை எல்லைக்குள் நெருங்கி - வேவு பார்க்கும்போதும் - பதற்றப்படாமல், தடுமாறாமல் - நுணுகிக் கவனிக்கக்கூடிய கூர்மையான அவதானிப்புத்திறன் (Power of Observation) இருக்க வேண்டும்.

பகைவனுடைய கண்களுக்குள் சிக்கிவிடும் ஒரு நிலைமை ஏற்பட்டுவிடுமானால், அவன் காண்பதற்கும் அவனது துப்பாக்கி வெடிப்பதற்கும் இடையில் உள்ள சில கணங்களுக்குள்ளேயே, மின்னல் வேகத்துடனும் மிகச் சரியானதாகவும் முடிவெடுத்துச் செயற்பட்டுவிட வேண்டிய சாதுரியம்மிக்க புத்திக்கூர்மை (Ingenious Intelligence) இருக்க வேண்டும்.

நீட்டிக்கொண்டிருக்கும் சுடுகுழல்களின் எதிரில் நிலவுகின்ற - வர்ணித்துச் சொல்ல முடியாத பயங்கரயான - அந்தப் பதற்றம் நிறைந்த படைத்தளச் சூழ்நிலைக்குள்ளும், கண்ணால் காணும் அத்தனையையும் அத்துபடியாக மனனஞ்செய்து, பகைவீட்டின் ஒவ்வொரு அங்குலத்தையும், பகைவீரரின் ஒவ்வொரு அசைவையும் துல்லியமாக மனதில் பதித்து வந்து, திட்டம் வகுக்கும் தளபதிகளிடம் அவற்றை அப்படியே ஒப்புவிக்கக்கூடிய நினைவாற்றல் சக்தி (Memory Power) இருக்க வேண்டும்.

எதிரியின் உச்சநிலைப் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கடந்து சென்று, மரணத்தின் குகைக்குள் வேவு பார்த்துவிட்டுத் திரும்பி வந்து, பார்த்தவற்றைச் சொல்லுகின்ற வேளையில் - முக்கியமில்லாத ஒன்றைத்தன்னும் மறந்து விட்டிருந்தாலோகூட, அல்லது தரவு ஒன்று முழுமைப்படாமல் சின்னத் தகவல்தன்னும் இல்லாமலிருந்தாலோகூட - தெளிவாகப் பார்த்து வரத் திரும்பவும் அனுப்பும்போதும் அந்தத் தேவையின் அவசியத்தை உணர்ந்து - மனஞ்சலியாமல், முகஞ்சுழியாமல் - அடுத்த இரவும் அந்த மரணத்தின் குகை நோக்கி நடக்கின்ற சகிப்புத் தன்மையும், தெளிந்த மனமும் இருக்க வேண்டும்.

படை நடவடிக்கைக்கான திட்டம் தீட்டப்படும்போது - தளத்தின் அகநிலைச் சாதகங்களையும் பாதகங்களையும் கருத்தில் வைத்து - தீர்மானிக்கப்படுகின்ற தாக்குதல் வழிமுறைகளின் சாத்தியங்களையும் அசாத்தியங்களையும் பற்றிக் கணிப்பீடுசெய்து எடுத்து விளக்கக்கூடிய நுண்ணிய படையியல் அறிவு (Military Knowledge) இருக்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக -

இன்னதுக்கு என்று இல்லாமலெல்லாம் சுடுகின்ற எதிரியின் ரவைகள் துளையிட்டுவிடும் ஒரு நிலையோ, அல்லது பொறிவெடியில் சிக்கி உடலுறுப்பொன்று பிய்பட்டு ரத்தம் பீறிடுகின்ற ஒரு நிலையோ, ரணவேதனையோடு உருவாகிடினும் துடித்துப் பதகளிக்காமல் - தான் குழம்பி, எதிரியையும் குழப்பி, காரியத்தைக் கெடுத்துவிடாமல் - கூடவந்த தோழன் வேவு பார்த்துச் செல்வதற்கு ஒத்துழைத்து, அமைதியாகத் தனது உயிரை அழிக்கக்கூடிய தற்கொடை மனப்பாங்கு இருக்க வேண்டும்.

இத்தகைய இயல்புகள்தான் ஒரு வேவு வீரனுக்குரிய பண்புகளாக உள்ளன. இந்தத் தனித்துவமான தன்மைகளால் நிறைவு பெற்றவர்களாலேயே, வேவுப் படைவீரர்களாகப் பணிபுரிய முடியும். எங்களது வேவுப்புலிகள் இப்படியானவர்கள்தான்.

அவர்களுடைய கதைகளைக் கேட்டுப் பாருங்கள். உங்களது இதயங்கள் கண்ணீர் விட்டுக் குமுறும். அவர்கள் ஒவ்வொருவருமே சொல்லொணாத் துயரங்களின் சொந்தக்காரர்கள். பெரிய பெரிய சோகங்களை அவர்கள் சுமந்துகொண்டு திரிகின்றார்கள். அவர்களுடைய வாழ்வு அப்படியானது.

பகைவனின் மடிதான் அவர்களுடைய வாழ்விடம். அவனுடைய அரண்களின் ஊடுகளுக்குள்தான் அவர்கள் தூங்கி விழித்தார்கள். எப்போதும் என்னவும் நடக்கலாம்; எங்கேயும் எப்படியும் நடக்கலாம். வெடி கொளுவி விழ்வான் நண்பன், "காயம்பட்டதா என் தோழா ......" என்று அள்ளி எடுத்து ஓடிவர அங்கு முடியாது. எங்களுடைய கையிலுள்ள தளமென்றால் கதையே வேறு. உடல்களை மீட்பதற்காகவே உயிர்களைக் கொடுக்கும் வகையில் வளர்க்கப்பட்டவர்கள் அல்லவா நாங்கள். ஆனால், அங்கு......? எங்களால் எதுவுமே செய்ய இயலாது. காயப்பட்டு விழும் தோழனும், தான் காப்பாற்றப்பட வேண்டும் என எண்ணவே மாட்டான்; அப்படியெந்த எதிர்பார்ப்பும் அவனிடம் இருக்காது. சாவுக் குழிக்கு மேலாக கம்பியில் நடக்கும் எங்கள் வேவு வீரர்களிடம் இருக்கும் ஒரே ஒரு நம்பிக்கை 'சயனைட்' மட்டும்தான்.

கட்டுவனுக்குப் பக்கத்தில் - பகைவனது நடு முற்றத்தில் - அவன் எதிர்பாராமல் எதிர்ப்பட்டுவிட்ட ஒரு காலைப் பொழுது. துப்பாக்கிகள் நீ உமிழ்ந்தபோது சன்னங்கள் தையவிடச் சரிந்தான் ஒரு தோழன். கூச்சலிட்டபடி பகைவன் பாய, பற்களுக்கிடையில் சயனைட்டை நெரித்துக்கொண்டு கூடவந்த தோழனைப் பார்த்து விழுந்தவன் கத்தினான், "சுட்டுப் போட்டு நீ ஓடித் தப்படா!" 'சுடச்சொன்னது தன்னையா......? ஆமியையா......?' இவன் யோசிக்க முன்னரே சோர்ந்துபோய், கண்கள் மேலே செருகியவனைக் கைவிட்டுவிட்டு - ரவை மழையில் நனையாமல் - தப்பித்து வந்த ஒரு வேவு வீரன்,

அடுத்த பயணம் புறப்பட, தான் தயாராகிக் கொண்டிருந்தான்.

ஒரு வேவு வீரனுக்கு அவதானம் முக்கியமானது. எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியிலும், இழுத்து விடுகின்ற ஒவ்வொரு மூச்சிலும் மிகுதியாக இருக்கவேண்டியது அது. ஏனெனில், நிறைய எதிர்பார்ப்புக்களுடன் உள்ளே அனுப்பப்பட்டவனான அவன், தன்னைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளான். தான் காயப்பட்டு விடாமல், தனது உடலோ உயிரோ சேதப்பட்டுவிடாமல் தன்னைக் கொண்டுவந்து சேர்க்க வேண்டியது, அவனது கடமையுமாகும். தெரியாத்தனமாக இழைத்துவிடுகின்ற சிறு தவறும்கூட - அவன் திரும்பிச் செல்வதற்கு இருக்கிற கடைசி வாய்ப்பையும் இல்லாமல் செய்துவிடும். அவதானமின்மையாலும் அலட்சியத்தாலும் நடந்துவிடும் எந்தவொரு கவலையீனப் பிழையும், வேறு எதையுமல்ல உயிரைத்தான் அழிக்கும்.

தச்சன்காட்டுச் சந்திக்கருகில், சிங்களக் காவலரண்களுக்கு முன்பாக இன்னொரு இரவு. சத்தமின்றி காலை வைத்து ஆமைகளாய் அசைந்தபோது, 'காலில் தட்டுப்படுவது கல்லோ...... மரத்துண்டோ......' என அலட்சியப்படுத்த, முழங்கியது மிதிவெடி. பத்து யாருக்கு முன்னால் இருந்து 'நாயோ...... பூனையோ......' என நினைத்து 'ரோச்' அடித்த பகைவீரன் - திகைத்து, துப்பாக்கி தூக்கி, தேர்வு நெம்பு தட்டிச் சுடுவதற்கு முன்னர், "என்னைச் சுட்டுப்போட்டு நீ தப்பி ஓடு மச்சான்......!" என்றவனை, உடலும் உள்ளமும் நடுங்கச் சுட்டு வீழ்த்திவிட்டுத் தப்பித்து மீண்ட இன்னொரு வேவு வீரன்,

கதையைக் கண்ணீரோடு சொல்லிக்கொண்டிருந்தான்.

சேந்தான்குளம் சந்தியடியில் ஒரு அதிகாலை. காவலரண்களுக்கு அருகாகப் பதுங்கிக் கொண்டிருந்தான் ஒரு வேவுப்புலி. காவல் உலா சுற்றிக்கொண்டுவந்த படைப்பிரிவு ஒன்றிலிருந்து எவனோ ஒரு சிங்களப் படையாள் எதேச்சையாக 'ரோச்' அடித்தான். வெளிச்சம் சரி நேராகத் தெறித்து அவனிலேயே பட்டது. உறுமத் தொடங்கின துப்பாக்கிகள்; தாவிப்பாய்ந்தான் எம்வீரன். தலைதெறிக்க ஓடத் தொடங்கினான். எதிரியின் காணிக்குள்ளேயே ஒரு கலைபாடு விடயம் என்னவென்றால், ஏற்கெனவே இரு நாட்களாக அவனுக்குச் சீரான சாப்பாடு இல்லை கலைத்துக் கலைத்துச் சுட்ட பகைவனுக்குத் தப்ப அவன் இளைத்து இளைத்து ஓடினான். உடல் ஒத்துழைக்க மறுத்தது, கால் சோர்ந்து கொண்டேபோனது; ஆனாலும் எங்கோ அவன் திடீரென மறைந்து விட, துரத்தியவர்கள் தடுமாறிப் போனார்கள்.

பிடிக்க முடியவில்லை. ஆற்றாமையால் கண்டபடி சுட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அப்படியே மறைந்திருந்தவன், இரவானதும் மெல்ல மெல்ல ஊரத் துவங்கினான். இயலாமையோடு ஊர்ந்தவன், எதிரியின் அரணைக் கடந்து வந்து சற்றுத் தூரத்திற்குள்ளேயே மயங்கிப் போனான். பாவம் முகாமிற்குத் தூக்கிவந்து 'சேலைன்' ஏற்றியபோது கண்திறந்தவன்,

தப்பித்து வந்தது ஒரு அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இப்படியாக - எத்தனையோ மயிரிழைகளில் தப்பி, அதிர்ஷ்டவசமாக மீண்டவர்கள் கொண்டு வந்த தரவுகள்தான், பலாலிப் பெருந்தளத்தின் மையத்தில் குறிவைக்க எங்களுக்கு அத்திவாரமாக அமைந்தன.

பலாலித் தாக்குதலின் தார்ப்பரியத்தை விளங்கிகொள்ள வேண்டுமானால், எங்களது வேவு வீரர்களைப் புரிந்துகொள்ள வேண்டும். எல்லாத் தாக்குதல்களையும் போலவேதான் அதுவும்! வேவுப் புலிவீரர்கள் பெற்றுத் தந்த வெற்றி அது.

எங்களது வேவுவீரர்கள் அபூர்வமான மனிதர்கள். சாவுக்கும் அஞ்சாத அவர்களது வீரத்தை எண்ணிப் பாருங்கள். அது போற்றுதற்குரியது. பகைவனின் நெஞ்சுக்கூட்டுக்கு மேலேறி வேவு பார்த்துவிட்டு மீளும் அந்த மனத்துணிவு அபாரமானது; அது ஒரு இணைதேட முடியாத நெஞ்சுறுதி!

தாங்கள் கொண்ட இலட்சியத்தில் அவர்கள் எத்துணை பற்றுக்கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அந்த இலட்சியத்திற்காகத் தங்களது இன்னுயிரையே துச்சமெனத் தூக்கி எறிய மனமுவந்து நிற்கும் அவர்களது தியாக உணர்வு, மேன்மை மிக்கது; உன்னதமானது!

தாயகத்தின் மீதும், தாயகத்து மக்கள் மீதும் அவர்கள் கொண்டிருந்த நேசம் இருக்கிறதே...... அது சாதாரணமானதல்ல. அது ஒரு அளவு கடந்த காதல்; தளர்ச்சியற்ற பிணைப்பு!

அந்த வீரர்களது ஒவ்வொரு அசைவுக்குப் பின்னால் இருந்தும், எதிரியின் வளைப்புகளிற்கு மத்தியில் நின்று அவர்கள் எடுத்த ஒவ்வொரு முடிவிற்குப் பின்னால் இருந்தும், அவர்களை இயக்கிக்கொண்டிருந்த உந்துவிசை - அவர்களுடைய அந்த 'மனநிலை'தான்.

அந்த 'மனநிலை' அவர்களை வழிநடத்திச் சென்ற தலைவனின் ஆகர்சிப்பு! அந்தத் தலைசிறந்த நெறிப்படுத்தலின் கீழ்தான் அவர்கள் அணிவகுத்தார்கள். பிரபாகரன் என்ற பெருந் தலைவனின் மீது அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் பற்றுணர்வும் இறுக்கமானது. அந்த வழிகாட்டலின் கீழ் எதையும் செய்வதற்கு அவர்கள் சித்தமாக இருக்கின்றார்கள்; இருப்பார்கள். இது மிகையானதல்ல!

எங்கள் அன்னைபூமியை ஆக்கிரமித்து நிற்கும் சிங்களப் படைகளின் மிகப் பெரியதும், மிகவும் பாதுகாப்பானதுமான தளமென்ற பெருமையுடையது பலாலி முக்கூட்டுப் படைத்தளம்.

வடபுலப் போர் அரங்கின் பிரதான கட்டளைத் தலைமையகமும் அதுவேதான்.

தனிக்காட்டு ராஜாவாக ஒரு சிங்கம், கால்களை அகல எறிந்துவிட்டு அச்சமற்ற அலட்சியத்தோடு படுத்திருப்பதைப் போல -

30 சதுர மைல் விஸ்தீரணத்தில் -


அகன்று நீண்டு விரிந்து கிடக்கின்றது அந்தப் பெருந்தளம்.

இவை தெரியாத விடயங்களல்ல; ஆனால், ஆச்சரியம் என்னவெனில் -

'என்னை எவரும் எதுவும் செய்துவிட முடியாது' என்ற இறுமாப்போடு நிமிர்ந்திருக்கும் அந்த முக்கூட்டுத்தளத்தினுள் நுழைந்து, எங்களது வேவுப்படை வீரர்கள் குறிவைத்த இலக்கு, அதன் இதயமாகும்

அது - சிறீலங்கா விமானப்படையின் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தலைமையகம் என்ற கேந்திர மையமாகும்.

இந்த முப்படைக் கூட்டுத்தளத்தைச் சுற்றிவர - பலமான உருக்குக்கவசம் போன்று - உள்ள அதன் முன்னணிப் பாதுகாப்பு வியூகத்தை



"அம்மா! நான் உங்கள் பிள்ளைதான்; ஆனால், தமிழீழத் தாய்மார்கள் எல்லோருக்கும் நான் ஒரு பிள்ளை.......

......அம்மா! என்னுடைய ஆசை மக்கள் மகிழ்ச்சியாக சுதந்திரமாக வாழவேண்டும் என்பதுவே. அதனால்தான் உயிரைப் பெரிதாக நினையாமல் நான் போராடப் போனேன்.

அதனால், எனக்காக நீங்கள் கவலைப் படாதீர்கள்; நீங்களும் சந்தோசமாக இருக்க வேண்டும்.

......எமது மண் சுதந்திரமடைய வேண்டும்: அது நடைபெற வேண்டுமானால் மக்கள் எல்லோருமே தாயகத்துக்காக உயிரைக் கொடுக்கவும் தயாராகக் கிளர்ந்தெழ வேண்டும்.

இதுதான் எனது கடைசி விருப்பம்."

- கெனடி வரைந்த கடைசி மடலிலிருந்து...

**கரும்புலி மேஜர் கெனடி (நிலவன்)**
**ஜெஸ்மி பெர்னாண்டோ**
**மன்னார் 13. 09. 1971**

(Front defence line) ஊடுருவி நுழைவதென்பதே, ஒரு இமாலயக் காரியம்தான்.

இமையாத கண்களுடன், துயிலாமல் காத்திருக்கும் பகைவனின் பத்து 'பற்றாலியன்' படைவீரர்கள் -

சரசரப்புக்கெல்லாம் சடசடத்து, சல்லடையாக்கிவிடத் தயாராக அவனது சுடுகருவிகள் -

உலகெங்கிலும் இருந்து பொறிக்கண்ணிகளையும், மிதிவெடிகளையும் வாங்கி வந்து, விதைத்து உருவாக்கியிருக்கும் அவனது கண்ணிவெடி வயல் (Mines field) -

வானுலக நட்சத்திரங்களின் ஒளிர்வினைக் கொண்டே, பூவுலக நடமாட்டங்களைத் துல்லியமாய்க் காட்டும் அவனது 'இரவுப் பார்வை'ச் சாதனங்கள் (Night vision) -

தேவைக்கேற்ற விதமாகப் பயன்படுத்தவென, தேவைக்கேற்ற அளவுகளில் கைவசமிருக்கும் அவனது தேடொளிகள் (Search Lights) -

அடுக்கடுக்கான சுருள்தடைகளாயும், நிலத்துக்கு மேலால் வலைப்பின்னலாயும் குவிக்கப்பட்டிருக்கும் அவனது முட்கம்பித் தடுப்புகள் -

வன்னிப்பக்கத்துக் குளங்களைப் போல, உயர்ந்த அரண்களாக எழுப்பப்பட்டுள்ள அவனது அணைக்கட்டுக்கள் -

உள்ளுக்கிருப்பதைக் கண்டு அறிவதற்கு வெளியில் இருந்து பார்க்க முடியாமல், நிலத்திலிருந்து வானுக்கு எழும்புகின்ற அவனது தகர வேலி -

எங்கிருந்து எங்கு என்று இடம் குறியாது, எப்போதிருந்து எப்போதுக்குள் என்று காலம் குறியாது - ரோந்து சுற்றிக்கொண்டு திரியும் அவனது 'அசையும் காவலணிகள்' (Mobile-Sentries)-

அத்தனை பலங்களினாலும் பலம் திரட்டி அசுர பலத்தோடிருந்தனர் எங்கள் பகைவர்.

''எந்தப் பலத்திலும் ஒரு பலவீனம் இருக்கும், தேடுங்கள்'' என்றார் எங்கள் தலைவர்.

நூல் நுழையும் ஊசிக்கண் துவாரம் தேடிய எம் வேவுவீரர்கள், அந்த 'மரண வலயத்தை' ஊடுருவிக் கடந்து, சிங்கத்தின் குகைக்குள் நுழைந்தார்கள்.

வெளியில், தனது முன்னணிக் காவலரண்களிலிருந்து, அசைக்க முடியாத தன்னுடைய பலத்தை எண்ணிப் பகைவன் இறுமாந்துகொண்டிருக்க -

உள்ளே, சுமார் பத்து மைல்களுக்கு அப்பாலிருக்கும் அவனது மையத்தளத்தில் - விமான ஓடுபாதைகளில் - நடந்து வானூர்திகளை வேவு பார்த்துக்கொண்டிருந்தனர் எம் வீரர்கள்.

அவர்களுடைய முயற்சிதான் ஒரு கரும்புலி நடவடிக்கைக்கான திட்டத்திற்கு கருக்கொடுத்தது அவர்களது ஓய்வற்ற கடும் உழைப்பு, அந்தத் திட்டத்தை படிப்படியாக வளர்த்து முழுமைப்படுத்தியது.

தாக்குதல் இலக்கை வேவு பார்த்து, தாக்குதலணி நகரப் பாதை அமைத்து, தாக்குதல் பயணத்தில் 'தரிப்பிடம்' கண்டு, தாக்குதலுக்கான நாள் குறித்த அவ்வேவுப்புலி வீரர்கள் -

கரும்புலி வீரர்களுக்கு உறுதுணையாக வழிகாட்டிச் செல்லத் தயாராகி நின்றார்கள்,

தாக்குதல் திட்டம் தயாரிக்கப்பட்டுவிட்டது.

பெரிய நோக்கம்;

அரசியல்ரீதியாகவும் படையியல்ரீதியாகவும் முக்கியத்துவத்தைப் பெறக்கூடிய ஒரு நடவடிக்கை.

எமது மக்களின் உயிர்வாழ்வோடு பிணைந்ததும்கூட.

ஆனால், அது ஒரு பலமான இலக்கு; உச்ச நிலைப் பாதுகாப்புக்கு உட்பட்ட கேந்திரம்.

செல்பவர்கள் வெல்லமுடியும்; ஆனால் திரும்ப முடியாது.

சிங்கத்தின் குகைக்குள் நுழைந்து அதனை எதிர்கொள்வதற்கு நிகரான செயல் அது.

இருப்பினும் தாக்குதல் தேவையானது.

வேவு அறிக்கைகளின் அடிப்படையில் தாக்குதலுக்கான வழிமுறை தீர்மானிக்கப்பட்டது.

அது ஒரு கரும்புலி நடவடிக்கை.

நான் முந்தி நீ முந்தி என்று நின்றவர்களுக்குள் தெரிவாகியவர்களைக்கொண்டு தயார் செய்யப்பட்டது ஒரு தாக்குதலணி.

கெனடி அதன் களமுனைத் தளபதி; அவனோடு இன்னும் 6 வீரர்கள்.

சிற்றுருவ மாதிரிப் படிவமாக (Model) அமைக்கப்பட்டிருந்த பலாலி வான்படைத் தளத்தையும், அதன் ஓடுபாதைகளையும் சுற்றி அவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

தளபதி கடாபி அவர்களுக்குரிய தாக்குதல் வழிமுறைகளைத் தெளிவுபடுத்தினார். ஒவ்வொருவருக்குமுரிய இலக்குகளைக் காட்டி விளக்கினார். ஒவ்வொருவரும் எவ்விதமாகச் செயற்படவேண்டும் என்பதை அவர் சொல்லிக் கொடுத்தார்.

அவர்களுக்குரிய ஒத்திகைப் பயிற்சிகள் ஆரம்பித்தன.

'பயிற்சியைக் கடினமாகச் செய்; சண்டையைச் சுலபமாகச் செய்' என்பது ஒரு படையியல் கோட்பாடு.

அந்தக் கோட்பாட்டின்படியே அவர்கள் செயற்பட்டார்கள்.

ஆகா......! அந்த நேரத்தில் நீங்கள் பார்த்திருக்கவேண்டும் அவர்களை;

மெய்யுருகிப் போயிருப்பீர்கள்.

எவ்வளவு உற்சாகம்; எவ்வளவு ஆர்வம்; ஓய்வற்ற பயிற்சிகளில் அவர்கள் காட்டிய மனமார்ந்த அந்த ஈடுபாடு......!

'எப்படி வாழவேண்டும்?' என்று சிந்தித்துக் கொண்டிருக்கின்ற எங்களுக்குள்ளிருந்துதானே அவர்கள் போனார்கள்!

உயிரைக் கொடுத்துவிட்டு எப்படி வெற்றியைப் பெறவேண்டும் என்றல்லவா ஒத்திகை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்குள் இருந்திருக்கக்கூடிய தேசாபிமானத்தை நினைத்துப் பாருங்கள்; அவர்களுக்குள் இருந்திருக்கக்கூடிய தமிழபிமானத்தை எண்ணிப் பாருங்கள்.

எங்கள் தலைவன் ஊட்டி வளர்த்த மேன்மை மிகு உணர்வு அது.

தங்களது கடைசிக் கணங்களில் -

தங்களின் உயிர் அழிந்துவிடப் போவதைப் பற்றியல்ல; தங்களின் இலக்குகள் அழிக்கப்பட வேண்டியதைப் பற்றியே அவர்கள் சதா சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

இப்படிப்பட்டவர்களிடம் போய் - ''நீங்களில்லையாம்; ஆட்களை மாத்தப்போகினமாம்'' என்று சொன்னால் எப்படியிருக்கும்?

அப்படி ஒரு கதை, கதையோடு கதையாக வந்து காதில் விழுந்தது.

''குலுக்கல் போட்டு புதுசா ஆக்களைத் தெரிவு செய்யப் போறனெண்டு சொர்ணம் அண்ணன் சொன்னவராம்'' என்றது அந்தத் தகவல்.


கெனடி குழம்பிவிட்டான். அவனால் அதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தளபதியிடம் போய் சண்டை பிடித்தான் -

''நான் தான் கட்டாயம் போக வேணும்'' என்று விடாப்பிடியாய்ச் சொன்னான். ''வேணுமென்றால் அவர் மற்ற ஆட்களை மாத்தட்டும். குலுக்கல் தெரிவுக்கு என்ர பேரைச் சேர்க்க வேண்டாம்'' - திட்டவட்டமாகக் கூறினான்.

எந்த மாற்றமும் செய்யப்படாமலேயே எல்லா ஒழுங்குகளும் பூர்த்தியாகிவிட்டன.

அவர்களுடைய நாள் நெருங்கிவிட்டது

கடைசி வேவுக்குப் போனபோது - அசோக்கிடம் ஜெயம் சொன்னானாம்,



கரும்புலி கப்டன் திரு
கோணமலை முருந்தன்
அம்பாறை - 21.02-1973



கரும்புலி கப்டன் நவரட்ணம்
கிருஸ்கோகு லெம்பேட் அண்ணாதாஸ்
வவுனியா - 22. 09. 1977

*அம்மா! அப்பா!*

*இனத்துக்கு சுதந்திரமாக ஒ நாடு இருந்தால்தான், எங்களுக்கு நிரந்தரமாக ஒரு வீடு இருக்கும். சுதந்திரமான ஒரு நாடு அமைக்கவே நான் போராட வந்தேன். இனித் தமிழீழத்தில் குண்டுகள் விழக் கூடாது; இதற்காகவே நான் இன்று கரும்புலியாகச் செல்கின்றேன்.*

*என் ஆசைத் தங்கச்சி! உனது அடுத்த பரம்பரை - எம் எதிர்கால சந்ததி - மிக மகிழ்ச்சியோடு வாழவேண்டும் என்பதற்காகவே, நான் கனவிலும் நினையாத களம் நோக்கிப் புறப்படுகின்றேன்.*

*வெல்க தமிழீழம்!*

• நவரட்ணம் கடைசியாக வரைந்த மடலிலிருந்து

''கரும்புலிகளுக்குள்ளேயும் நாங்கள் வித்தியாசமாகச் செய்யப்போகிறோம்; இது ஒரு புது வடிவம். நாங்கள் இவற்றை அழிக்கும்போது சிங்களத் தளபதிகள் அதிர்ச்சிக்குள்ளாவார்கள்.''

தலைவர் வந்து வழியனுப்பிவைத்தார்;

அவர்களுக்கு அது பொன்னான நாள்.

ஒன்றாயிருந்து உணவருந்திய தலைவர், கட்டியணைத்து முத்தமிட்டு விடை தந்தபோது -

கரும்புலிகளுக்கே உயிர் புல்லரித்தது.

''நான் நம்பிக்கையோடு எதிர்பார்த்திருக்கின்றேன்'' - தலைவர் வழியனுப்பி வைத்தார்.

மேலே - வானத்துக்கும் பூமிக்கும் இடையில் -

வெகு உல்லாசத்துடன் -

உலங்கு வானூர்தி ஒன்று பலாலிப் பக்கமாகப் போய்க்கொண்டிருந்தது. அட்டகாசமாய் சிரித்துவிட்டு **நவரட்ணம்** சொன்னான்: ''இண்டைக்குப் பறக்கிறார், நாளைக்கு நித்திரை கொள்ளப் போகிறார்.''

'நீண்ட' பயணத்திற்குத் தயாராகி, சிரித்துக் கும்மாளமடித்துக்கொண்டு நின்றவர்களிடம், ''எல்லாரும் வெளிக்கிட்டு விட்டீங்கள்...... தூரதேசத்துக்குப் போல இருக்கு......''

தளபதி **சொர்ணம்** கேட்க -

கண்களால் புன்னகைத்து **ரங்கன்** சொன்னான் -

''ஓமோம்...... கிட்டண்ணையிட்ட...... திலீபண்ணை...... இப்பிடி நிறைய தெரிஞ்ச ஆக்கள் அங்க இருக்கினம்.''

பலாலிப் பெருந்தளத்தின் முன்னணிக் காவலரண்களுக்கு மிகவும் அருகில் எங்கள் தளபதிகளிடம் விடைபெற்றுச் செல்லும்போது, நின்று திரும்பி, தளபதி **செல்வராசா**விடம் ''அண்ணன்மார் கவனமாகப் போங்கோ 'செல்' அடிப்பான்'' என்று சொல்லிவிட்டுப் போனான் **திரு**.

கைகளை அசைத்து அசைத்துச் சென்ற கரும்புலிகள் இருளின் கருமையோடு கலந்து மறைந்தார்கள்.

தாக்குதலணி, தாக்கு மையத்தைச் சென்றடைவதே ஒரு பெரிய விடயமாகக் கருதப்பட்டது;

தாக்குதலைச் செய்வது இன்னொரு பெரிய காரியம்.

புறப்பட்டுப் போகும்போது அவர்களிடம் இருந்தது தளராத உறுதி, தணியாத தாகம், எல்லாவற்றையும் மேவி - அசையாத தன்னம்பிக்கை.

• * •

ஓகஸ்ட் திங்கள் முதலாம் நாள் -

பகற்பொழுது பின்வாங்கிக்கொண்டிருந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டை இருள் விழுங்கிக்கொள்ள, பலாலிப் பெருந்தளத்தை, மின்னாக்கி' ஒளிவெள்ளத்தில் அமிழ்த்தியது!

மாலை 6.30 மணியைக் கடந்துவிட்டிருந்த நேரம்.

தங்கள் இலக்கை நோக்கி அவர்கள் நகர்ந்துகொண்டிருந்தார்கள்.

வேவுப் புலி வீரர்கள் முன்னே; கரும்புலி வீரர்கள் பின்னே.

மாவிட்டபுரத்தையும் தெல்லிப்பழையையும் இணைக்கும் பிரதான வீதியும், தச்சன்காட்டிலிருந்து வந்து அதனைச் சந்திக்கும் குறுக்கு வீதியும் இராணுவச் சப்பாத்துக்களால் மிதிபட்டு பேச்சு மூச்சற்றுக் கிடந்தன.

வீதியோரமாக, தச்சன்காட்டடியில் அணி நகர்ந்துகொண்டிருந்த சமயம் -

அவதானமாக; மிக அவதானமாக அவர்கள் ஊர்ந்துகொண்டிருந்த போது -

திடீரென தெல்லிப்பழைப் பக்கமாகக் கேட்டது 'ட்ரக்' வண்டிகளின் உறுமல்.

பயங்கர வேகத்தோடு அது நெருங்கிக்கொண்டிருந்தது-

'நேராக மாவிட்டபுரம் பக்கம்தான் போகப் போறான்' என நினைத்த வேளை, தச்சன்காட்டுப் பக்கமாகவே திரும்பினான் - வந்த வேகம் தணியாமலேயே.

நல்ல காலம் -

பளீரென அடித்த ஒளி வெள்ளத்தினுள் மூழ்கிப் போகாமல், பக்கத்திலிருந்த காணிக்குள், எல்லோரும் சம நேரத்தில் பாய்ந்து மறைந்துவிட்டார்கள்.

அவர்களைக் கடந்து நேராகச் சென்று, சந்திக் காவலரணடியில் நின்றவன், நின்றானா......? அந்த வேகத்திலேயே திரும்பி வந்தான்.

'என்ன நாசமடாப்பா......?' என நினைத்த வேளை, 'ட்ரக்' வண்டிகள் இரண்டும் அவர்களுக்கு நேர் முன்னே வந்து சடுதியாய்த் தரிக்க -

சில்லுகள் கிளப்பிய புழுதியோடு, புற்றீசலாய்க் குதித்தனர் சிங்களப் படையினர்.

குழல் வாய்கள் தணலாக துப்பாக்கிகள் பேசத் துவங்கின. 'பொம்மருக்கென்று' காவி வந்த நவரட்ணத்தின் 'லோ' ஒன்று, 'ட்ரக்' வண்டியைக் குறிவைத்து முழங்கியது.

எல்லோரும் ஓடத் துவங்கினர். அது சண்டை போடக்கூடிய இடமல்ல; சண்டை பிடிப்பதற்குரிய நேரமுமல்ல -

அவர்கள் அங்கே போனது இதற்காகவுமில்லை.

எங்கே தவறு நடந்தது......? எங்காவது 'சுத்துச் சென்றிக்காரன்' கண்டானோ......? 'டம்மி' என்று நினைத்த பொயின்ரிலிருந்து பார்த்துச் சொன்னானோ? எங்காவது வீடு உடைத்து சாமான் எடுக்க வந்த ஆமி கண்டு அறிவித்தானோ....?

என்னவாகத்தான் இருந்தாலும் - அவர்கள் சென்ற நோக்கம் கெட்டுவிட்டது.

தச்சன்காட்டில் நிகழ்ந்த அந்தத் துரதிர்ஷ்டம்தான், எங்களது தாக்குதல் திட்டத்தையே திசைமாற்றியது.

'**திரு**' இல்லை; '**ரங்கன்**' இல்லை; '**புலிக்குட்டிக்கு**' என்ன நடந்ததென்று தெரியவில்லை; **ராஜேஸ்** ஒரு வழிகாட்டி - அவனையும் காணவில்லை.

எங்கள் தாக்குதலணி சேதாரப்பட்டுவிட்டது.

ஏனையோர் ஒரு பக்கமாக ஓடியதால் சிதறாமல் ஒன்றாயினர்.

தாம் வந்த காரியத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டிய தவிர்க்க முடியாத கட்டாயம் எழுந்துவிட்டதை, எஞ்சியிருந்தவர்கள் உணர்ந்தனர்; இந்தச் சண்டையோடு எதிரி உசாரடைந்துவிடுவான். கரும்புலி வீரர்கள், வேவுப்புலி வீரர்களை அவசரப்படுத்தினர்.

''உடனடியாக எங்களை தாக்குதல் முனைக்குக் கூட்டிச் செல்லுங்கள்.''

அடுத்த சில மணி நேரங்களின் பின் - பொழுது நள்ளிரவை நெருங்கிக்கொண்டிருந்த சமயத்தில் - அவர்கள், வான்படைத் தளத்தின் முட்கம்பி வேலிக்கருகில் தயாராகிக்கொண்டிருந்தனர்.

பிரதான கட்டளையகத்தோடு கெனடி தொடர்பு எடுத்தான். நடந்து முடிந்த துயரத்தை அவன் அறிவித்தான்.

''7 பேருக்கென வகுக்கப்பட்ட தாக்குதல் திட்டத்தில் எஞ்சியிருப்பது 4 பேர் மட்டுமே'' என்பதை அவன் தெரியப்படுத்தினான். ''எதிரி முழுமையாக உசார் அடைந்துவிட்டதால், இருக்கின்றவர்களுடன் உடனடியாக தாக்குதலை ஆரம்பிக்க வேண்டும்'' என்று வலியுறுத்தினான். ''தாமதிக்கின்ற ஒவ்வொரு நிமிடமும் இலக்குகள் தப்பிப் போக நாங்கள் வழங்குகின்ற சந்தர்ப்பங்கள்'' என்பதை விளக்கினான். ''தாக்குதலை நிகழ்த்தாமல் திரும்பி, தப்பித்து வெளியேறுவதும் சாத்தியப்படாது'' என்பதையும் சொன்னான்.

அவனிடம் சற்று நேரம் அவகாசம் கேட்ட பிரதான கட்டளையகம், 'பிரத்தியேக'மாக அமைக்கப்பட்டிருந்த இன்னொரு கட்டளையகத்தோடு கலந்து பேசியது. கெனடி சொல்வதே சரியானது எனவும், அதைவிட வேறு வழி இல்லையெனவும் பட்டது.

தாக்குதலுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

முட்கம்பி வேலிகளை நறுக்கி அறுத்து வேவுப்புலி வீரர்கள் பாதை எடுத்துக் கொடுக்க, வான்தளத்தில் இலக்குகளைத் தேடி கரும்புலி வீரர்கள் உள்ளே நுழைந்தனர்.

• • •

அசோக்கிடமும் ரஞ்சனிடமும் விடைபெற்று அவர்கள் உள்ளே சென்றுவிட, அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு, இவர்கள் வெளியே திரும்பிக்கொண்டிருந்தனர் -

விடி சாம நேரம் -

படு இருள்.

மிகக் குறுகிய தூரத்திற்குள்தான் எதனையும் மங்கலாய்த்தன்னும் பார்க்க முடியும்.

மாவிட்டபுரத்திற்குப் பக்கத்தில் ஒரு குச்சொழுங்கையால் அவர்கள் திரும்பிக்கொண்டிருந்தபோது -

ஒரே ஒரு மணித்துளி -

இருந்தாற் போல் - அந்த இருளுக்குள் இருளாக...... அவர்களிற்கு முன்னால்......

அதென்ன......? நிழலாக ஏதோ அசைவது போல உள்ளது!

ரஞ்சனின் கைகளைச் சுரண்டி மெதுவாக, ''ஆமி நிக்கிறான் போல......'' - அசோக் சொல்லிமுடிக்கும் முன் -



சிறப்பு வேவுப் படை வீரன்
மேஜர் அசோக் (சேரன்)
குணசிங்கம் குணராஜ்
30 . 07 . 1975
யாழ்.

தீப்பொறி கக்கிய சுடுகுழலிலிருந்து காற்றைக் கிழித்துச் சீறிய ரவைகள் - அசோக்கின் தசை நார்களையும் கிழித்துச் சென்றன!

தலையோ ....... கழுத்தோ ....... நெஞ்சுப் பகுதியாகவும் இருக்கலாம்...... சரியாகத் தெரிய வில்லை...... சன்னங்கள் பாய்ந்து சல்லடை யாக்கிச் சென்றன.

''அம் ......'' முழுமையாக வெளிவராத குர லுடன் குப்புற வீழ்ந்தான் அந்த வீரன்.

அடுத்த நிமிடத்தில் -

கொஞ்சம் ரவைகளையும் ஒரு கைக்குண்டை யும் பிரயோகித்து, அசோக்கையும் பறிகொடுத்து விட்டு. பக்கத்துக் காணிக்குள் பாய்ந்து ரஞ்சன் ஓடிக்கொண்டிருந்தான்.

முன்பொரு நாள் -

மயிலிட்டிப்பக்கமாக வேவுக்குச் சென்ற ஒரு இரவில், இராணுவம் முகாமிட்டிருக்கும் பாட சாலை ஒன்றை ரஞ்சனுக்குக் காட்டி, அசோக் மனக்குமுறலோடு சொன்னானாம் -

''இதுதான்ரா நான் படிச்ச பள்ளிக்கூடம்; இண்டைக்கு இதில சிங்களவன் வந்து குடியிருக் கிறான் மச்சான்...... வீட்டுக்கு ஒரு ஆளெண்டா லும் போராட வந்தா இந்தஇடமெல்லாத்தையும் நாங்கள் திருப்பி எடுக்கலாந் தானேடா......''

ரஞ்சனது நெஞ்சுக்குள் இந்த நினைவு வந்து அசைந்தது.

தொடர்ந்து நகருவது ஆபத்தாயும் முடிந்து விடக்கூடும் என்பதால், அருகிலேயே ஒரு மறை விடம் தேடி அவன் பதுங்கிக்கொண்டான்.

இப்போது அவன் தனித்துப்போனான்; கூட வந்த தோழர்கள் எல்லோரினதும் நினைவுகள், இதயமெல்லாம் நிறைந்து வாட்டின.

இனி எப்படியாவது அங்கிருந்து அவன் வெளியேற வேண்டும். வந்தவர்களில் எஞ்சியிருப் பது அவன் மட்டும்தான். நடந்தவற்றைப் போய்ச் சொல்வதற்காகவாவது, அந்த மரணக் குகைக்குள்ளிருந்து அவன் பாதுகாப்பாகத் தப் பிக்க வேண்டும். எனவே அவன் இனி மிக அவ தானமாக இருக்கவேண்டியது கட்டாயமாகின் றது.

மெல்ல விடிந்தது.

அவன் தொடர்ந்து நகர்ந்து வெளியேற நினைத்த போது -

மின்னலென ஒரு யோசனை மூளைக்குள் பொறிதட்டியது.

'தச்சன்காட்டில் யாராவது அதிர்ஷ்டவச மாகத் தப்பியிருக்கலாம். அவர்கள் பாதை தெரி யாமல் மாறுப்பட்டு, வேவு வீரர்கள் திரும்பி வரு வார்களஎன நம்பி, உள்ளே நுழைந்த முதல்நாள் இரவு அவர்கள் தங்கிய தரிப்பிடத்தில் போய் நிற்கக்கூடும்.'

நப்பாசைதான்; ஒரு மன உந்துதலோடு அவன் போனான்.

அவன் அங்கே செல்ல......அங்கே......!

என்ன அதிசயம்! அவன் நினைத்து வந்த தைப் போலவே அவர்கள்......


ஆனால் நால்வருமல்ல.

ரங்கனும் புலிக்குட்டியும் மட்டும் நின்றார் கள்; ராஜேஸ் இல்லை, 'திரு'வும் இல்லை.

அவனைக் கண்டதும் அவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி 'போன உயிர் திரும்ப வந்ததுபோல' என்பார்களே, அப்படி ஒரு மகிழ்ச்சி. ''உடனே எங்களைக் கொண்டுபோய் கெனடி அண்ணை விட்ட விடு; இண்டைக்கு இரவுக்காவது அடிக் கலாம்'' என்று அவர்கள் அவசரப்படுத்திய போது -

ரஞ்சன் நடந்தவற்றைச் சொன்னான்.

அந்தக் கரும்புலி வீரர்களால் அதனைத் தாங்கமுடியவில்லை. தாங்கள்பங்கு கொள்ளாமல் அந்தத் தாக்குதல் நடந்து முடிந்ததை அவர்க ளால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. தங்களது கைகளை மீறி எல்லாம் நடந்து முடிந்துவிட்டதை எண்ணி, அவர்கள் மனம் புழுங்கினார்கள்.



கரும்புலி லெப்ரினன்ற் ரங்கன்
குணமாலை ரதிக்குமார்
கிளிநொச்சி - 09.02.1976



இருப்பவர்கள் - திலகன், நவரட்ணம், கெனடி, திரு, ரங்கன், ஜெயம்.

"உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது உரைத்தது தமிழீழம் - அதை
நிரை நிரையாகவே நின்றினி விரைவினில் நிச்சயம் எடுத்தாள்வோம்
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும் தனியரசு என்றிடுவோம் - எந்த
நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின் நினைவுடன் வென்றிடுவோம்."

எல்லாம் முடிந்தது.

''இனி நாங்கள் எப்படியாவது, எந்தப் பிரச் சினையும் இல்லாமல் வெளியில் போய்விடவேண் டும'' என்றான் ரங்கன். போகத்தானே வேண் டும், பிறகென்ன......? ஆனால், ரங்கன் அதற் குக் காரணம் ஒன்றைச் சொன்னான்.

''இதற்குள் நிற்கும்போது எங்களுக்கும் ஏதா வது நடந்தால், இயக்கம் எங்களையும் கரும்புலி கள் என்றுதானே அறிவிக்கும். அப்போது விமா னங்களை அழித்தவர்கள் என்ற பெயர்தானே எங்களுக்கும் வரும். ஆனால், அவர்களுடைய தியாகத்தில் நாங்கள் குளிர்காயக்கூடாது.'' - இதுதான் அவனுடைய மனநிலை.

மிகவும் பாதுகாப்பானது என்று கருதிய பாதை ஒன்றினால் வெளியேற அவர்கள் முடிவு செய்தனர்.

ரஞ்சன் வழிகாட்டினான்; கூட்டிவந்த வேவு வீரர்களில் இப்போது எஞ்சியிருப்பது அவன்மட் டும்தான்.

பகற்பொழுது. எனவே ஆகக்கூடிய அவ தானத்துடன் அவர்கள் நகர்ந்துகொண்டிருந்த னர்.

மெல்ல மெல்லச் சூரியன் உச்சியை நோக்கி உயர்ந்துகொண்டிருந்தான்.

அப்போது அவர்கள் சீராவளைக்குப் பக்கத் தில் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

சரியாக நினைவில் இல்லை, ஒரு பதினொரு மணியிருக்கும் -

ஒரு பற்றைக்குள்ளிருந்து ''கவுத......?'' என ஒரு குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தால், ஒரு சிங்களப் படை யாள் குந்திக்கொண்டிருந்தான்; தங்களுடைய ஆட்கள் என்று நினைத்திருப்பான் போலும்.

என்ன பதிலைச் சொல்வது......? அவர்கள் யோசிக்க, அவனுக்குள் சந்தேகம் எழுந்துவிட் டது.

சற்று உறுத்தலாக, ''ஒயா கவுத......?'' - கேட்டுக்கொண்டே துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு அவன் எழ, ரஞ்சனின் கையில் இருந்த 'ரி.56' அவனுக்குப் பதில் சொல்லியது.

''நாங்கள் புலிகள்.''

வெடித்தது சண்டை -

அவர்கள் ஓடத் துவங்கினர்; மொய்த்துக் கொண்டு கலைத்தனர் சிங்களப் படையினர்.

கணிசமானதொரு தூர இடைவெளியில் அந்தக் கலைபாடு நடந்தது. பகைவனின் சன் னங்கள் அவர்களை முந்திக்கொண்டு சீறின.

திடீரென ரங்கன் கத்தினான், ''டேய்! என்ர காலில வெடி கொளுவிற்றுதடா......''

ஓடிக்கொண்டே பார்த்தார்கள். வலதுகால் என்பது தெரிகிறது; எந்த இடத்தில் என்பது தெரியவில்லை. அதைத் தெரிந்து கொள்வதால் எந்தப் பயனும் வந்துவிடப் போவதுமில்லை.

ரங்கன் ஓட ஓட அவனது காலிலிருந்து ரத் தம் தெறித்துக்கொண்டிருந்தது.

இவர்களால் எதுவுமே செய்ய முடியாது. எதனையும் செய்ய வேண்டுமென அவனும் எதிர்பார்க்கவும் இல்லை.

''என்னால ஏலாதடா......என்னைச் சுட்டுப் போட்டு நீங்கள் ஓடுங்கோடா!'' - ரங்கன் கத்தி னான்.

அவன் ஓட முடியாமல் பின்தங்கிக்கொண் டிருந்தான்.

ரஞ்சன் சொன்னான், ''குப்பியைக் கடித்துக் கொண்டு. 'சாஜ்ஜரை' இழு மச்சான்......''

'சாஜ்ஜர்' - உடலோடு இணைக்கும் வெடி குண்டு. தாக்குதலுக்குப் புறப்படும்போது கரும் புலி வீரர்களுக்கு வழங்கப்பட்டது. சண்டைக் களத்தில் எதிரியிடம் பிடிபடக்கூடிய சந்தர்ப்பம் வருமானால், ஆகக் கடைசி வழியாக அது அவர்களைக் காக்கும்.

ரங்கன் குப்பியைக் கடித்துக்கொண்டே 'சாஜ்ஜரின்' பாதுகாப்பு ஊசியையும் இழுத்து எறிந்தான்.

மெல்ல மெல்ல அவன் பின்தங்கி விழ, கலைத்துக்கொண்டு வந்த படையினர் அவனை நெருங்க......

சாஜ்ஜரும் ரங்கனும் வெடித்துச் சிதறிய சத்தம், ஓடிக்கொண்டிருந்தவர்களின் காதில் விழுந்தது. திரும்பிப் பார்த்தார்கள் - புகை யும், அவனது உயிரும் தமிழழுதத்தின் தென்ற லோடு கலந்துகொண்டிருந்தன.

அந்த வெடி அதிர்ச்சியில் குழம்பித் தடு மாறி, பகைவன் திரும்பவும் கலைக்கத் துவங்கு முன், அவர்கள் ஓடி மறைந்து விட்டார்கள்.

எங்கோ பதுங்கியிருந்து, எல்லாம் அடங்கி இரவாகிய பின, மெல்ல மெல்ல நகர்ந்து வெளி யில வந்தனர் ரஞ்சனும் புலிக்குட்டியும.

தச்சன்காட்டில் மாறுபட்டுக் காணாமற் போன ராஜேசும் ஐந்து நாட்களின் பின்னர், ஒருவழியாக வந்து சேர்ந்தான்.

ஆனால் அசோக் வரவில்லை; ரங்கன் வர வில்லை; திரு வும் வரவேயில்லை.

* * *

நடு இரவு கடந்து போனது.

ஓகஸ்ட் 2-ஆம் நாளின் ஆரம்ப மணித்துளிகள் சிந்திக்கொண்டிருந்தன.

கெனடி பிரதான கட்டளையகத்துக்கு விபரத்தை அறிவித்தான்.

''இப்போ நாஙகள் நான்கு பேர்தான் நிற் கின்றோம. ஜெயம், நவரட்ணம், திலகன மற்றும நான். நாங்கள் தாமதிக்க முடியாது; மற்றவர்களுக்கு என்ன நடந்தது என்பதும் தெரியாது; அவர்கள் வருவார்கள் என எதிர் பார்க்கவும முடியாது. எனவே நாங்கள் நால் வரும் உள்ளே இறஙகுகிறோம. எங்களால் முடிந்தளவிற்கு வெற்றிகரமாகச் செய்கிறோம்.''

தச்சன்காட்டுச் சண்டையின் செய்தி எங் கும் பறந்தது.

அந்தப் பெருந்தளம் - மயிர்களைச் சிலிர்த் துக்கொண்டு நிமிரும் ஒரு சிஙகத்தைப்போலத் துடித்தெழுந்தது.

ஆபத்து தங்களது வீட்டுக்குள்ளேயே நுழைந்துவிட்ட அச்சம், சிப்பாய்களைக் கவ்விக்கொண்டது.

சுடுகருவிகள் தயாராகின.

எநத நேரத்திலும், எந்த முனையையும் உள்ளே நுழைந்த புலிகள் தாக்குவர் எனப் படைவீரர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

விமான ஓட்டிகள் வானூர்திகளில் ஏறி தயார்நிலையில் இருக்குமாறு பணிக்கப்பட் டனர்.

வான்படைத் தளத்தைப் பாதுகாக்கும் காவலரண்களும், வானூர்திகளுக்குரிய காவற் படையினரும் உசார்நிலையில் வைக்கப்பட் டனர்.

# சிங்களப் படைகள் சந்தித்த 'ஆவணி அமளி'

**1977** ஆவணி மாதம், பேரினவாதிகள் கட்ட விழ்த்துவிட்ட இனக்கொலை நடவடிக்கையில் தமிழ் மக்கள் அனுபவித்த இன்னல்கள் வரலாறாகிவிட்டன.

இது தமிழர்களின் துயர வரலாறு.

1994 ஆவணி மாதம், சிங்கள தேசத்துப் படைகள் மீது புலிகள் நடாத்திய அதிரடிகளால் சிங்களப் படைகள் சந்தித்த இழப்புகளும், தோல்விகளும் வரலாறாகப் போகின்றன.

இது தமிழர்களின் வீர வரலாறு.

முன்னையதை ஆவணித் துயரம் என எமது மக்கள் அழைப்பர்; பின்னையதை ஆவணி வெற்றி என எமது மக்கள் தாராளமாகக் கொண்டாடலாம்.

இந்த ஆவணி வெற்றியில் சிங்கள அரசின் முப்படைகளுடன் அதன் பொலிஸ்படையும் பேரிழப்பைச் சந்தித்தது குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒரு விடயம். தரைப்படை - வான்படை - கடற்படையுடன் பொலிஸ்படையும் புலிப்படையிடம் நன்றாக வாங்கிக்கட்டியுள்ளன.

வடபுலக் கடலிலும் தென்தமிழீழத் தரையிலும் புலிகளின் ஆவணி அதிரடிகள் பாரிய இராணுவத் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

இன்னுமொரு கோணத்தில் சொன்னால், இந்த ஆவணி அதிரடிகள் சிங்களப் படையின் ஆக்கிரமிப்புக்குள்ளிருக்கும் இராணுவ இலக்குகள் மீது நடாத்தப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத் தக்கது. தீவகம், பலாலி, மன்னார், மட்டக்களப்பு, திருமலை என்று தமிழீழம் எங்கும், பரவலான முறையில் இந்த அதிரடிகள் நடந்துள்ளன.

இது புலிகளின் இராணுவ வல்லமையை - இலககுகளை வீழ்த்துவதில் அவர்களிடம் இருக்கும் உறுதியை - துணிச்சலை - உயிர் அர்ப்பணிப்பை - தெளிவாகக் காட்டுகின்றன. அதேவேளை சிங்களப் படையின் இயலாமையையும் இது உலகிற்கு முரசறைந்து சொல்கின்றது.

2 . 8 . 94 அன்று பலாலி தளத்தினுள் கொமாண்டோபாணியில் புகுந்த கரும்புலிகளின் அணி ஒன்று, வான்தளமீது நடாத்திய திகைப்பூட்டும் தாக்குதலுடன் இந்த ஆவணி அதிரடி தொடங்கியது.



**கடற் கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி**
புஸ்பகலா துரைசிங்கம்
மண்கும்பான் யாழ்ப்பாணம்
வீரச்சாவு. 16. 08, 94.

அடுத்ததாக, தென்தமிழீழத்தில் கட்டுமுறிவு என்ற இடத்தில், காட்டின் மத்தியில் எஸ் - எஃவ் எனப்படும் சிறப்புப்படையினர் (Special force) அமைத்து வைத்திருந்த இராணுவ முகாமை 11. 8. 94. அன்று தாக்கியழித்த புலிவீரர்கள், அங்கிருந்து கணிசமான ஆயுதங்களையும் கைப்பற்றியிருநதனர். இந்த முகாம் தகர்ப்பு தென் தமிழீழப் போர் அரங்கிற்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்திருந்தது

அண்மைக்காலமாக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் புலிவீரர்கள்மீது படையினர் பல பதுங்கித்தாக்குதல்களை நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தககது. இதில் பல புலிவீரர்கள் வீரச்சாவடைந்திருந்தனர். இப் பதுங்கித்தாக்குதல்களை எஸ் - எ:வ் எனப்படும் சிறப்புப் படையினரே நடாத்திவந்தனர். இப்போது அந்த சிறப்புப் படையின் தங்ககமே தாக்கியழிக்கப்பட்டுள்ளது. இது பதிலடியை சாரமாகக்கொண்ட ஒரு இராணுவ சாதனை என்பதுடன், தென்தமிழீழத்தில் புலிவீரர்களுக்குச் சாதகமான விளைவுகளைக் கொடுக்கும் என்பதும் உறுதி.

இத்துடன் 10. 8. 94 அன்றும், 13 8. 94 அன்றும் தீவகப்பகுதியில் புலிகள் இரண்டு அதிரடிகளை நடாத்தியிருந்தனர்.

இதேபோல 11. 8. 94 அன்று, மன்னார்த் தீவில் அமைந்திருந்த சிங்களப் பொலிஸ் நிலையம் மீது புலிவீரர்கள் நடாத்திய 'கொமாண்டோ' பாணியிலான அதிரடியில், 10 பொலிசார் கொல்லப்பட்டிருந்தனர்; பலர் படுகாயமடைந்திருந்தனர். பெருமளவு ஆயுதங்களையும் புலிவீரர்கள் கைப்பற்றியிருந்தனர்.

இதேபோல 16 8.94 இல் காங்கேசன் துறை முகத்தினுள் நுழைந்த கடற்புலிகளின் சிறப்புப் பிரிவினர், அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த கட்டளைக்கப்பலைத் தாக்கி மூழ்கடித்த நிகழ்ச்சி, ஆவணி அதிரடிக்கு கிரீடம் சூட்டியதுபோலாகிவிட்டது. கரும்புலியாகச் சென்று கப்பலைத் தகர்த்த முதற் பெண் கடற்கரும்புலியாக, கப்டன் அங்கயற்கண்ணி வரலாற்றில் பொறிக்கப்பட்டுவிட்டார்! ○

---



**கரும்புலி மேஜர் ஜெயம்**
குணநாயகம் தேவர்ாசா
திருக்கோணமலை. 05.03.1976



**கரும்புலி மேஜர் திலகன்**
வேலு சுப்பையா ராஜ்
மட்டக்களப்பு 01 01.1975

பாதுகாப்பு ஏற்பாடுகள் உச்சநிலைக்கு வந்து பரிபூரணமாக ஆயத்தமாகிய பகைவன், எதனையும் எதிர்கொள்ளத் தயர்ராகப் போர்க் கோலம் பூண்டுநின்ற வேளை -

யுத்த சன்னதர்களர்கப் புறப்பட்டுச் சென்ற எங்கள் கரும்புலி வீரர்கள் - சிங்கத்தின் சிலிர்த்துநின்ற பிடரி மயிர்களினூடு ஊர்ந்து, அதன் முகத்தை நெருங்கினர்.

பிரதான கட்டளையகத்திலிருந்த ' வோக்கி' யில் கெனடியின் குரல் ஒலித்தது - கெனடி நிலைமையை விளக்கினான்.

''நாங்கள் நல்லா கிட்ட நெருங்கிற்றம்......''

'' ஏதாவது தெரிகிற மாதிரி நிற்குதா?''

'' நாங்கள் தேடி வந்ததில் ஒன்றுதான் நிற்குது. பக்கத்தில் ஒருத்தன் நிற்கிறான்.''

'' வேற ஒன்றும் இல்லையா:.....?''

'' அருகில சின்னன் ஒன்று ஓடித்திரியுது.''

'' நீங்கள் தேடிப் போன மற்றதுகள்......?''

'' இங்க இருந்து பார்க்க எதுவும் தெரியேல்ல. தூரத்தில நிற்கக்கூடும். இறங்கினதற்குப் பிறகுதான் தேடக்கூடியதாக இருக்கும்.''

'' இப்ப நீங்கள் இறங்கக்கூடிய மாதிரி நிக்கிறீங்களா......?''

'' ஓமோம்...... குண்டு எறியக்கூடிய தூரத்திற்கு வந்திட்டம். நீங்கள் சொன்னால் நாங்கள் அடிச்சுக் கொண்டிறங்கிறம்.''

'' அப்படியெண்டால் நீங்கள் அப்படியே செய்யுங்கோ.''

கட்டளையகம் அனுமதி வழங்கியது.

அதன் பிறகு என்ன நடந்திருக்கும்......?

கெனடி உத்தரவிட்டிருப்பான் -

' தாக்குதலை ஆரம்பியுங்கள்''

நவரட்ணத்தின் கையிலிருந்த 'லோ ' முழங்க ' பெல் 212 ' இல் தீப்பற்றி எரியும்போது, கெனடி 'டொங்கா 'னால் அடிக்க திலகன் அதன் மீது கைக்குண்டை வீசியிருப்பான்.

அதே சம நேரத்தில் - ஜெயத்தின் 'லோ' பவள் கவச வண்டியைக் குறிவைத்து முழங்கியிருக்கும்.

பலாலித் தளத்தின் மையமுகாம் அதிர்ந்திருக்கும்!

தங்களது அனைத்துக் கவசங்களையும் உடைத்து நுழைந்து, பாதுகாக்கப்பட்ட அதியுயர் கேந்திரத்தையே புலிகள் தாக்கிவிட்டதை எதிரி கண்முன்னால் கண்டு திகைத்திருப்பான்.

சன்னங்களைச் சரமாரியாய் விசிறும் துப்பாக்கிகளோடு கூச்சலிட்டபடி பகைவன் குவிந்து வர - கெனடியின் 'டொங்கான்' எறிகணைகளைச் செலுத்தி இருக்கும்.

திலகனின் ரி.56 ஓய்வற்று இயங்கிக்கொண்டிருக்க, தங்களது அடுத்த இலக்குகளைத்தேடி அவர்கள் ஓடிக்கொண்டிருந்திருப்பார்கள்.

''கெனடி......கெனடி......நிலைமை என்ன மாதிரியெண்டு எங்களுக்குச் சொல்லுங்கோ......''

''ஒரு ஹெலியும் ஒரு பவளும் அடிச்சிருக்கிறம். ரெண்டும் பத்தி எரிஞ்சுகொண்டிருக்குது... கிட்டப் போக ஏலாம சுத்தி நிண்டு சுத்திக் கொண்டிருக்கிறாங்கள்.''

''மற்றதுகள் என்ன மாதிரி......?''

''தொடர்ந்து அடிச்சுக்கொண்டு உள்ள இறங்கிக்கொண்டிருக்கிறம்,

பொம்மருகளைத் தேடுறம்......''

ஆனால் - 500 மீற்றருக்கு அகன்று 2600 மீற்றருக்கு நீண்டிருந்த விசாலமான ஓடு பாதை அது. மிகவும் தூரத்தில் நிறுத்திவைக்கப் பட்டிருந்த 'சியா மாசெட்டி' குண்டு வீச்சு விமானங்களில் தயாராய் இருந்த ஓட்டிகள், அவற்றை மேலெடுத்துவிட்டனர்.

கெனடியின் தொடர்பு நீண்ட நேரத்தின் பின் கிடைத்தது.

''கெனடி......நிலைமை எப்பிடி எண்டு சொல்லுங்கோ......''

''ஒரு 'ஹெலி'யும், ஒரு 'பவளும்' அடிச்சிருக்கிறம்......முழுசா எரிஞ்சு கொண்டிருக்கு...... புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.''

''கெனடி......நீங்கள் அவசரப்பட வேண்டாம் ...மற்ற ஆக்கள் என்னமாதிரி?''

''நானும் திலகனும் நிக்கிறம்......''

''கெனடி...... நீங்கள் அவசரப்படாதேங்கோ......தொடர்ந்து எதுவும் செய்யக்கூடிய மாதிரி இல்லையா......?''

''அண்ணை......எனக்கு ரெண்டு காலும் இல்லையண்ணை......''

''......................................''

''......................................''

''......................................''

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்; புலிகளின் தாகம்......தமிழீழ......''

''கெனடி......கெனடி......''

''கெனடி......கெனடி......''

''திலகன்......திலகன்......''

''கெனடி......கெனடி......''

* * *

ஒரு முதியவர் நீண்ட பெருமூச்சொன்றை விட்டுக்கொண்டு -

''என்னடா தம்பி செய்கிறது......வயசும் போகுது......'' என்று கவலைப்பட்டபோது -

அருகில், 'ஈழநாதம்' நாளேட்டில் அவர்களின் படங்களைப் பார்த்து நின்ற அவரின் துணைவியார் ஏக்கத்தோடு சொன்னார் -

''நீங்கள் வயசு போகுதெண்டு கவலைப்படுறியள்... எத்தின பிள்ளையளுக்கு வயசு போறதேயில்லை......!'' ○

---

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்